
Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

தமிழ்Mirror
www.tamilmirror.lk

FRIDAY, JULY 16, 2021

வெள்ளிக்கிழமை ஜுலை 16, 2021 | ஒளி: 07 கதிர்: 49 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE

# கொழும்பு, யாழ்., கிளியில் 19 ‘டெல்டா’கள் சிக்கின



இந்தியாவிலிருந்து பரவிய ‘டெல்டா’ என்றழைக்கப்படும் கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் 19 பேர், இனங்காணப்பட்டுள்ளனர் என சுகாதார அமைச்சின் பிரதிப் பணிப்பாளர் நாயகம், வைத்தியர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

கொழும்பு, பிலியந்தலை, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களிலேயே டெல்டா தொற்றுக்குள்ளானவர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

அதிக வீரியம் கொண்ட ‘டெல்டா’ கொரோனா தொற்று தொடர்பான ஆய்வுகள் கடந்த 12ஆம் திகதி முதல், ஆரம்பிக்கப்பட்டன என ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடம், ஒவ்வாமை, நோய் எதிர்ப்பு மற்றும் உயிரியல் பீடத்தின் தலைவர் கலாநிதி சந்திம ஜீவந்தர தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

# ஐ.தே.கவுடன் திகா இரகசிய பேச்சு



எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினரும், தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் தலைவருமான பழனி திகாம்பரம், ஐக்கிய தேசிய கட்சியுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளார் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தொடர்ச்சி P2

# ‘தேர்தல் மாவட்டங்களை 40 வரை அதிகரிக்கவும்’

## யோசனையை முன்வைத்தது பஃவ்ரல் அமைப்பு





தொகுதிவாரி மற்றும் விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறை அடங்கிய கலப்பு முறைமையிலான தேர்தல் முறைமை இலங்கைக்குப் பொருத்தமானது எனத் தெரிவித்துள்ள நீதியான தேர்தலுக்கான மக்கள் செயற்பாடு (பஃவ்ரல்) அமைப்பு, தேர்தல் மாவட்டங்களை 22 முதல் 40 வரை அதிகரிப்பதற்கான யோசனையையும் முன்வைத்துள்ளது.

தொடர்ச்சி P2

## தனிமைப்படுத்தல் சட்டம்

# ‘எவருக்கும் விதிவிலக்காகாது’



கொரோனா தனிமைப்படுத்தல் சட்டங்களை மீறுபவர்களைக் கைது செய்யுமாறு பொலிஸாருக்கு ஆலோசனை வழங்கப்பட்டு உள்ளதாகத் தெரிவித்த சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி, தனிமைப்படுத்தல் சட்டத்துக்கு நாட்டு மக்கள் அனைவரும் கட்டுப்பட வேண்டும் என்றார்.

“இச்சட்டம், ஜோசப் ஸ்டாலின், பியுமி ஹன்சமாலி ஆகியோருக்கு மாத்திரம் விதிவிலக்கானது அல்ல” என்றார்.

தொடர்ச்சி P2

# ஆட்கொணர்வு மனுக்கள் 15 தாக்கல்



தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டிருக்கும் தொழிற்சங்க தலைவர்கள் உள்ளிட்டவர்களை, நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துமாறு கோரி, மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் 15 ஆட்கொணர்வு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

## ‘நாட்டுக் கணக்கில் அல்ல;

# சொந்தக் கணக்கில் வரவு வைப்பதில் மூவரும் கில்லாடிகள்’



ஜனாதிபதி, பிரதமர், புதிய நிதியமைச்சர் ஆகியோர், தமக்குப் பணத்தை தேடும் வழி தெரியும் என்று கூறினாலும் அவர்களுக்கு தனிப்பட்ட ரீதியில் பணத்தை தேடும் வழியே தெரியுமென்பதை நாங்கள் நன்கு அறிவோம். சொந்தக் கணக்குகளில் வைப்பிலிடுவதில் அவர்களுக்கு நிகர், அவர்களே எனத் தெரிவித்துள்ள ஜே.வி.பி, நாட்டுக்கான நிதியை அவர்களுக்குத் திரட்டத் தெரியாது என்றது.

தொடர்ச்சி P2

# தமிழ் அரசியல் கைதிகளுக்கு வேகமாகத் தொற்றுகிறது கொரோனா

## ‘குரலற்றவர்களின் குரல் அமைப்பு’ தெரிவிப்பு

■ எம்.றொசாந்த், எஸ்.நிதர்ஷன்



சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் இருவருக்கு, கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளதாக, குரலற்றவர்களின் குரல் அமைப்பு தெரிவித்துள்ளது.

குறித்த அமைப்பு ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள அறிக்கையிலேயே, இவ்வாறு குறிப்பிட்டுள்ளது.

கொரோனா வைரஸ் தொற்று நான்காவது அலை, சிறைச்சாலைக்குள் பரவத்தொடங்கி உள்ளதாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அநுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த நடேசன் தருமராசா என்ற தமிழ் அரசியல் கைதி, கொரோனா தொற்றுக்குள்ளாகி வெலிக்கடை சிறைச்சாலை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தொடர்ச்சி P2

# அமெரிக்கத் தூதுவருடன் கூட்டமைப்பு சந்திப்பு



தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பிரதிநிதிகளுக்கும் இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் அலெய்னா டெப்லிட்ஸ் தலைமையிலான குழுவினருக்கும் இடையில், நேற்று (15) முக்கிய சந்திப்பொன்று இடம்பெற்றது
இந்தச் சந்திப்பில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன், இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, கூட்டமைப்பின் உறுப்பினர்களான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன், செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர்.
இந்தச் சந்திப்பு இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் அலெய்னா டெப்லிட்ஸின் உத்தியோகபூர்வ இல்லத்தில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.
தமிழ்த் தேசிய பிரச்சினைகளுக்கான தீர்வு தொடர்பாக இலங்கை வழங்கியிருக்கும் வாக்குறுதிகளின் அடிப்படையில் செயலாற்ற வேண்டும் என்பதைத் தாம் வலியுறுத்துவதாக, அமெரிக்க பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## 15 வயது சிறுமி துஷ்பிரயோகம்:

# கப்பல் கெப்டனும் உதவியாளரும் அடையாளம் காணப்பட்டனர்

பாலியல் செயற்பாடுகளுக்காக இணையத்தளங்களின் ஊடாக விற்கப்பட்ட 15 வயதான சிறுமியை, பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தினர் எனக் குற்றஞ்சாட்டப்பட்டிருந்த கப்பல் கெப்டனும் அவருடைய உதவியாளரும் அடையாளம் காண்பிக்கப்பட்டனர்.

தொடர்ச்சி P2

## 10 அரசியல் கட்சிகள்

# முன்மொழிவுகளை முன்வைத்துள்ளன

தேர்தல் சட்டங்கள் மற்றும் தேர்தல் முறைமையில் மறுசீரமைப்புகளை மேற்கொள்வது தொடர்பில் நியமிக்கப்பட்டுள்ள பாராளுமன்ற விசேட குழுவுக்கு, ஏற்றுக்கொள்ளப்பட்ட 10 அரசியல் கட்சிகளிடமிருந்து முன்மொழிவுகள் கிடைக்கப்பெற்றுள்ளன என, குழுவின் தலைவரும் சபை முதல்வரும் அமைச்சருமான தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

பாராளுமன்றக் கட்டடத்தொகுதியில், நேற்று (14) நடைபெற்ற அந்தக் குழுவின் கூட்டத்தின் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

# யாழில் இன்று கவனயீர்ப்பு




■ எஸ்.நிதர்ஷன்

யாழ்ப்பாணம் பஸ் நிலையத்துக்கு முன்பாக, இன்று (16) கவனயீர்ப்புப் போராட்டமொன்று முன்னெடுக்கப்படவுள்ளதாகத் தெரிவித்துள்ள, இலங்கை ஆசிரியர் சங்கம், அதில் பங்கேற்குமாறு அழைப்பு விடுத்துள்ளது.

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொது செயலாளர்

தொடர்ச்சி P2

# 13 வயதான சிறுமி துஷ்பிரயோகம்; 32 வயதான காதலனும் சிக்கினார்

## தந்தை, பெண்ணொருவர் உள்ளிட்ட நால்வர் கைது

■ ரஞ்சித் ராஜபக்ஷ

நாவலப்பிட்டி, ஹரங்கல, இதுக்தென்ன எனுமிடத்தைச் சேர்ந்த 13 வயதும் 10 மாதங்களேயான பாடசாலைக்குச் செல்லும் சிறுமியை பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியதாகக் கூறப்படும் ஐவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதில், அச்சிறுமியின் தந்தை, சிறுமிக்கு 10 வயதானபோது துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியுள்ளார் என விசாரணைகளிலிருந்து கண்டறியப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

# களுதாவளை சிறுவர் இல்லத்தில் 22 பேருக்கு கொரோனா தொற்று

■ வா.கிருஸ்ணா



மட்டக்களப்பு, களுவாஞ்சிகுடி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட களுதாவளையில் உள்ள சிறுவர் இல்லம் ஒன்றில் 21 சிறுவர்கள் உட்பட 22 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதனையடுத்து, குறித்த சிறுவர் இல்லம் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.

மேற்படி இல்லத்தில் உள்ள சிறுவர்கள் சிலருக்கு காய்ச்சல் ஏற்பட்ட நிலையில், அவர்கள் களுவாஞ்சிக்குடி ஆதார வைத்தியசாலைக்கு

தொடர்ச்சி P2



# பளை விபத்தில் கோசல பலி

■ சுப்பிரமணியம் பாஸ்கரன்

பளை, முல்லையடி பகுதியில், நேற்று (15) அதிகாலை இடம்பெற்ற வாகன விபத்தில் பொல்கஹவெல பகுதியைச் சேர்ந்த 20 வயதுடைய கோசல என்ற இளைஞன் உயிரிழந்துள்ளார்.

வவுனியாவில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த ஒட்டோ, வீதி ஓரத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனத்தை அவதானிக்காது, அதனுடன் மோதி விபத்துக்குள்ளானது.

இதன்போது, ஓட்டோவில் பயணித்த மூவர் காயமடைந்தனர். அதிலோர் இளைஞன் உயிரிழந்தார்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# ஐ.தே.கவுடன் திகா இரகசிய பேச்சு

அவர், ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவுக்கு நேற்று (15) சென்றுள்ளார் என அறியமுடிகின்றது.

அங்கு, கட்சியின் பொதுச் செயலாளர் பாலித்த ரங்கே பண்டாரவை சந்தித்து கலந்துரையாடியுள்ளார் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சில மாதங்களாக வெளிநாட்டில் தங்கியிருந்த பழனி திகாம்பரம் எம்.பி, நாடு திரும்பியதன் பின்னர், ஐ.தே.கவின் பொதுச் செயலாளரை சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

இச்சந்திப்புத் தொடர்பில் இருதரப்பில் இருந்தும் உத்தியோகபூர்வ அறிவிப்புகள் எவையும் வெளிவரவில்லை.

இதேவேளை, பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தலைமையிலான தமிழ் முற்போக்குக் கூட்டணியில், பழனி திகாம்பரம் எம்.பி அங்கம் வகிப்பதும் குறிப்பிடத்தக்கது.

கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில், தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கம், ஐக்கிய தேசிய கட்சியுடன் இணைந்தே போட்டியிட்டது என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

# ‘எவருக்கும் விதிவிலக்காகாது’



நாட்டில் தொடர்ச்சியாக இடம்பெறும் போராட்டங்கள் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

கொவிட்-19 வைரஸ் தொற்றில் இருந்து பாதுகாத்துக் கொள்ள உலக சுகாதார ஸ்தாபனம் பரிந்துரைத்துள்ள சுகாதாரப் பாதுகாப்பு அறிவுறுத்தல்களை முறையாக பின்பற்றினால் வைரஸ் தொற்றில் இருந்து மீளலாம் எனத் தெரிவித்துள்ள அவர், இதன் காரணமாகவே சுகாதாரப் பாதுகாப்பு அறிவுறுத்தல்கள் கட்டாயமாக்கப்பட்டுள்ளன. கொவிட் விடயத்தில் சுயநலமாக எவரும் செயற்பட முடியாது.

“நாட்டு மக்களின் சுகாதாரப் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் நோக்கில் தனிமைப்படுத்தல் சட்டம் அமல்படுத்தப்பட்டுள்ளது. தனிமைப்படுத்தல் சட்டத்துக்கு முரணாக செயற்படுபவர்களை கைது செய்யுமாறு பொலிஸாருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. ஒரு தரப்பினரது பொறுப்பற்ற செயற்பாட்டின் காரணமாக மீண்டும் நெருக்கடியான சூழ்நிலைக்குச் செல்ல முடியாது” என்றார்.

கொவிட்-19 தடுப்பூசி செலுத்தும் பணிகள் இன்னும் இரண்டு மாத காலத்துக்குள் நிறைவு பெறும் என தெரிவித்த அவர், நாட்டு மக்கள் மத்தியில் அரசியல் ரீதியிலும், சமூகம்சார் ரீதியிலும் பல பிரச்சினைகள் காணப்படுகின்றன. பிரச்சினைகளுக்குத் தீர்வை பெற்றுக் கொள்வதற்குப் போராட்டத்தில் ஈடுபடும் தருணம் இதுவல்ல. ஆகவே, போராட்டங்களில் ஈடுபடுவதை சிவில் தரப்பினரும், தொழிற்சங்கத்தினரும் முழுமையாக தவிர்த்துக் கொள்ள வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

# களுதாவளை சிறுவர் இல்லத்தில் 22 பேருக்கு கொரோனா தொற்று

சென்றபோது, அங்கு சில சிறுவர்களுக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அதனை தொடர்ந்து ஏனைய சிறுவர்களுக்கும் அங்கு கடமையாற்றுபவர்களுக்கும் அன்டிஜன் பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்ட நிலையில், அங்கு 19 பேருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அதனை தொடர்ந்து தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்ட அன்டிஜன் பரிசோதனைகளில் மேலும் மூவர் தொற்றாளர்களாக இனங்காணப்பட்ட நிலையில், சிறுவர் இல்லம் மூடப்பட்டுள்ளது.

இந்தச் சிறுவர்கள் இல்லத்திலிருந்த 21 சிறுவர்களும் விடுதிக் காப்பாளர் ஒருவருமே தொற்றாளர்களாக இனங்காணப்பட்டுள்ளனர்.

ஏனையவர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என களுவாஞ்சிகுடி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் தெரிவித்தனர்.

# 40 வரை அதிகரிக்கவும்’



தேர்தல் சட்டங்கள் மற்றும் தேர்தல் முறைமையில் மறுசீரமைப்புகளை மேற்கொள்வதற்காக நியமிக்கப்பட்டுள்ள பாராளுமன்ற விசேட குழு, அதன் தலைவர், அமைச்சர் தினேஷ் குணவர்தனவின் தலைமையில், பாராளுமன்றக் கட்டடத்தொகுதியில் நேற்று (15) கூடியது. இதன்போதே பஃவ்ரல் அமைப்பு, மேற்கண்டவாறு யோசனைகளை முன்வைத்துள்ளது.

பூகோள விடயங்கள், சனத்தொகை மற்றும் ஏனைய விடயங்களை கருத்தில் கொண்டே தேர்தல் மாவட்டங்களை 22 முதல் 40 வரை அதிகரிக்குமாறு யோசனையை முன்வைத்துள்ளதாக, அவ்வமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

“முற்படுத்தப்பட்ட வாக்களிப்பு முறையின் (Advance Voting System) தேவையை தெளிவுபடுத்திய பஃவ்ரல் அமைப்பு, அனைத்து வாக்காளர்களுக்கும் வாக்குரிமையை வழங்குவது அத்தியாவசியமானது” என்றும் குறிப்பிட்டுள்ளது.

வேட்பாளர்களின் செலவீனங்களை வரையறுத்தல், ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தலை ஒரே தினத்தில் நடத்துதல், தேர்தல் நாட்காட்டியொன்றை செயற்படுத்துதல், தேர்தல் முறைமையில் மற்றும் தற்பொழுது காணப்படும் தேர்தல் சட்டத்தில் காணப்படும் குறைகளைக் கண்டறிந்து அவற்றை புதுப்பித்தல், அரச அதிகாரம் மற்றும் அரச சொத்துகளை துஷ்பிரயோகம் செய்வதைத் தடுத்தல், தண்டப்பணம் மற்றும் தேர்தல் சட்டத்தை புதுப்பித்தல் உள்ளிட்டவை தொடர்பிலும் தமது யோசனைகளை முன்வைத்துள்ளது.

இதேவேளை, அனைத்து வாக்காளர்களும் நியாயமான வகையில் தகவல்களை பெற்றுக்கொள்ளும் உரிமையை உறுதிப்படுத்துதல், பிரசாரங்கள் தொடர்பான சட்டங்கள் உள்ளிட்ட போதுமான அளவு பெண் பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்துதல் போன்ற விடயங்கள் தொடர்பில் எடுத்துரைத்துள்ளது.

வேட்பாளர்களின் சொத்துகள் மற்றும் பொறுப்புக்களை பிரகடனப்படுத்துதல், தேசியப்பட்டியல் முறையின் ஊடாக வேட்பாளர்களைத் தெரிவு செய்தல், தேர்தல் ஆணைக்குழுவின் சுயாதீன தன்மையைப் பாதுகாத்தல் மற்றும் அரசியல் கட்சிகளை பதிவு செய்யும் முறைமை தொடர்பிலும் பஃவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் நீண்ட நேரம் குழுவில் கருத்துத் தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தலையும் பொதுத் தேர்தலையும் ஒரே தினத்தில் நடத்துவது சாத்தியமில்லை” என இங்கு கருத்துத் தெரிவித்த தேர்தல் ஆணைக்குழுவின் முன்னாள் தவிசாளர் மஹிந்த தேசப்பிரிய, தேர்தல் பிரசார செலவுகளை கட்டுப்படுத்துவதற்காக துரிதமாக சட்டங்கள் உருவாக்கப்பட வேண்டும் என்றார்.

# தமிழ் அரசியல் கைதிகளுக்கு வேகமாக தொற்றுகிறது கொரோனா

அதேபோன்று, கொழும்பு மகசின் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த செல்லத்துரை கிருபாகரன் என்ற அரசியல் கைதிக்கும் கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டு சிறைச்சாலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் எனவும் அவ்வமைப்பு அனுப்பிவைத்துள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தமிழ் அரசியல் கைதிகளைப் பொறுத்தமட்டில், இவர்கள் இரண்டாவது தடவையாக கொரோனா தொற்றுப் பாதிப்புக்குள்ளாகி வருகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, கொழும்பு புதிய மகசின் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் நோய்வாய்ப்படுகின்ற நிலையில், அவர்களுக்கான சிகிச்சைகளை பெற்றுக்கொள்வதில் கடுமையான இடையூறுகள் ஏற்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

மகசின் சிறைச்சாலை வைத்தியர்களால் மேலதிக சிகிச்சைக்ளுக்கென பரிந்துரைக்கப்படுகின்ற தமிழ் அரசியல் கைதிகளை, கொழும்பு தேசிய வைத்தியசாலைக்குக் கொண்டு சென்று சிகிச்சையைப் பெற்றுக்கொடுப்பதற்கு சிறைச்சாலைகள் நிர்வாகம் பொருத்தமற்ற காரணங்களை கூறி, வெறுமனே காலத்தை கடத்தி வருவதாக கைதிகள் கவலை தெரிவித்துள்ளனர் என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# யாழில் இன்று கவனயீர்ப்பு

ஜோசப் ஸ்டாலின் உள்ளிட்டோரின் சட்டவிரோத கைது, கல்வியில் இராணுவ மயமாக்கல், கல்வியை தனியார் மயப்படுத்தல் ஆகியவற்றுக்கு எதிராகவே, இன்று காலை 10 மணிக்கு, யாழ்ப்பாணம் பஸ் நிலையத்துக்கு முன்பாக, இந்தக் கவனயீர்ப்புப் போராட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அரசாங்கத்தின் அடக்குமுறை மற்றும் சர்வாதிகார போக்குக்கு எதிராக முன்னெடுக்கப்படவுள்ள இந்தப் போராட்டத்துக்கு ஆர்வமுடைய அனைவரும் கலந்துகொண்டு வலுசேர்க்குமாறும், ஏற்பாட்டாளர்கள் அழைப்பு விடுத்துள்ளனர்.

# பளை விபத்தில் கோசல பலி

காயமடைந்தவர்கள், பளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவித்த பளை பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தனர்.

# 13 வயதான சிறுமி துஷ்பிரயோகம்; 32 வயதான காதலனும் சிக்கினார்

கைது செய்யப்பட்ட ஐவரில், அவருடைய காதலனான 32 வயதான நபரும், அத்துடன் பெண் ஒருவரும் அடங்குகின்றனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

தன்னுடைய மகளை, கடந்த 1ஆம் திகதிமுதல் காணவில்லையென அவருடைய தாய் நாவலப்பிட்டி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடொன்றை செய்துள்ளார்.

இந்நிலையில், காணவில்லையென தெரிவிக்கப்பட்ட அந்தச் சிறுமியை, சிறுமியின் உறவினர்கள் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர். அதன்பின்னர், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட அச்சிறுமியிடம் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் போதே,

> **“ என்னுடைய தந்தையால், 10 வயதில் நான் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டடேன். அதன்பின்னர், என்னுடைய காதலன் துஷ்பியோகம் செய்தார்**

அச்சிறுமி துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

அதன்பிரகாரம், “என்னுடைய தந்தையால், 10 வயதில் நான் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டடேன். அதன்பின்னர், என்னுடைய காதலன் துஷ்பியோகம் செய்தார். ஹரங்கல பிரதேசத்திலுள்ள கற்குகைக்கு காதலன் அழைத்துச் சென்றார். அங்கு தடுத்துவைத்து இன்னும் சிலர் என்னை துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தினர்” என பொலிஸில் வாக்குமூலமளித்துள்ளார் சிறுமி.

சிறுமியின் தந்தையும் காதலனும் பிரதான சந்தேகநபர்கள் எனத் தெரிவித்த பொலிஸ் பேச்சாளர், சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண, ஏனையோ பாலியல் வன்புணர்வுக்கு ஒத்துழைப்பு நல்கினர் என்ற குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அந்த ஐந்து பேரும் நாவலப்பிட்டி நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டு, விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். அத்துடன், இந்தச் சம்பவத்துடன் மேலும் ஆறு பேருக்கு தொடர்புள்ளதாக விசாரணையில் தெரியவந்துள்ளதாகவும் அவர்களையும் கைதுசெய்யும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் கூறினார்.

# கொழும்பு, யாழ்., கிளியில் 19 ‘டெல்டா’கள் சிக்கின

இதற்கமைய, சுகாதார அமைச்சால் வழங்கப்பட்ட கொரோனா தொற்றாளர்கள் 96 பேரின் மாதிரிகள் ஊடாக இந்த ஆய்வுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்திருந்தார்.

இந்நிலையிலேயே, டெல்டா தொற்றுக்கு உள்ளான 19 பேர், நேற்றையதினம் இனங்காணப்பட்டுள்ளனர்.

டெல்டா தொற்றுக்குள்ளான நிலையில் இதுவரையிலும் 39 பேர் இனங்காணப்பட்டுள்ளனர். அவர்களில் 20 பேர், கொழும்பு மாவட்டத்துக்குள்ளேயே இனங்காணப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# சொந்தக் கணக்கில் வரவு வைப்பதில் மூவரும் கில்லாடிகள்’

நாட்டுக்காக நிதியை திரட்டும் முறைமை, நாட்டின் கடனை செலுத்தப்பணம் தேடும் முறைமை தொடர்பில் அவர்களுக்குத் தெளிவு உள்ளதா என்பது தொடர்பான கேள்வி இப்போதும் எழுகிறது என்றும் ஜே.வி.பி தெரிவித்துள்ளது.

அக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று (15) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைத்த போது, ஜே.வி.பியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரான சுனில் ஹந்துனெத்தி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

“நாட்டின் நெருக்கடிக்கு பிரதான காரணம் கொரோனா என தொடர்ச்சியாக அரசாங்கம் தெரிவிக்கிறது. கொரோனா இல்லாவிட்டால் எமக்கு இந்த நெருக்கடி இல்லை என்கின்றனர். ஆனால், விடயம் வரலாற்று காலம் தொடக்கம் நாம் நிவாரண சலுகைகளைப் பெற்றே எமது செயற்பாடுகளை முன்னெடுத்தோம்” என்றார்

“கடன் வட்டியின் கீழ் அபிவிருத்தி செயற்பாடுகளை முன்னெடுத்த நாடு. ஆனால், நாம் 2007ஆம் ஆண்டுக்கு பிறகு அபிவிருத்தி பிணைமுறி மற்றும் சர்வதேச சந்தைக்குச் சென்று, அதிக வட்டிக்கு கடன் பெற்றதுடன், அந்த கடன் முதலீட்டுக்கான பிரதிபலனை உரிய முறையில் முன்னெடுக்காமையால், அந்தக் கடனை டொலரில் செலுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது” என்றார்.

இதனை எமது மக்கள் நன்றாக புரிந்துகொள்ள வேண்டும். ஏனெனில் இறுதியில் நட்டம், வட்டி, சுமையை சுமக்க வேண்டிய நிலை மக்களுக்கே ஏற்படும் எனத் தெரிவித்த அவர், அத்தியாவசிய பொருள்கள் பலவற்றின் இறக்குமதி, கட்டுமானப் பணிகளுக்கான மூலப் பொருள்கள் இறக்குமதி தடைசெய்யப்பட்டுள்ளன. அவ்வாறு செய்தும் டொலர் நெருக்கடியிலேயே நாம் இருக்கிறோம்.

அரசாங்கம் இந்நெருக்கடி தொடர்பில் எதிர்வரும் மாதங்களுக்கு எவ்வாறு செயற்பட போகின்றது என்பதை, நாட்டுக்கு சொல்ல வேண்டும். இப்போது ராஜபக்‌ஷ வியாபார நிறுவனம், தனிப்பட்ட சொத்தாக கருதி எமது நாட்டின் வளங்களை விற்கின்றது. இதுவா அரசாங்கத்தின் கொள்கை என நாம் கேட்கின்றாம் என்றார்.

கோட்டாபய ராஜபக்‌ஷ, ஜனாதிபதி ஆனதும் மெஜிக் செய்வார் என்றனர். ஆனால், நிதியமைச்சர் பஷில் ராஜபக்‌ஷ நிதிப் பிரச்சினையைத் தீர்ப்பார் என்று இப்போது சொல்கின்றனர். அவரது அமெரிக்கா முறையைப் பயன்படுத்தியாவது இந்த நெருக்கடிக்கு பதில் சொல்லவேண்டும் என சுனில் ஹந்துநெத்தி கேட்டுக்கொண்டார்.

# கப்பல் கெப்டனும் உதவியாளரும் அடையாளம் காணப்பட்டனர்

சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்ட இவ்விருவரும் கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் நேற்று (15) நடைபெற்ற அடையாள அணிவகுப்பில் நிறுத்தப்பட்டனர். அதன்போது, பாதிக்கப்பட்ட அச்சிறுமி, அவ்விருவரையும் அடையாளம் காண்பித்துள்ளார்.

தனியார் கப்பல் நிறுவனத்தின் கெப்டன், கெப்டனின் உதவியாளர் ஆகிய இருவருமே இவ்வாறு அடையாளம் காட்டப்பட்டுள்ளனர்.

அந்த அடையாள அணிவகுப்புக்குப் பின்னர், அவ்விருவருக்கு எதிராகவும் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகள் நிறைவுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளன என சிறுவர் மற்றும் பெண்கள் பணியகத்தின் அதிகாரிகள், நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டுவந்தனர்.

> **“ அடையாள அணிவகுப்புக்குப் பின்னர், அவ்விருவருக்கு எதிராகவும் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகள் நிறைவுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளன**

அதன்பின்னர், அவ்விருவரும் கடுமையான நிபந்தனையின் கீழ் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் இருவரும் தலா, 25 ஆயிரம் ரூபாய் பெறுமதியான ரொக்கப்பிணையிலும் 25 இலட்சம் ரூபாய் பெறுமதியான தலா இரண்டு சரீரப்பிணைகளிலும், கொழும்பு மேலதிக நீதவான் லோஜினி அபேவிக்ரம விடுதலை செய்தார்.

முன்னெடுக்கப்படும் விசாரணைகளுக்கோ, முறைப்பாட்டாளரின் சாட்சிகளுக்கோ எதிர்காலங்களில் எவ்விதமான அழுத்தங்ளையும் பிரயோகிக்கக்கூடாது என கடுமையாக உத்தரவிட்டுள்ள மேலதிக நீதவான், அவ்வாறான முறைப்பாடுகள் கிடைக்குமாயின் நிபந்தனை பிணை இரத்துச் செய்யப்பட்டு, வழக்கு விசாரணைகள் நிறைவடையும் வரையிலும் விளக்கமறியலில் வைக்கப்படுவீர்கள் என சந்தேகநபர்கள் இருவருக்கும் எச்சரித்தார். இதேவேளை, சந்தேகநபர்கள் இருவரும் ஓகஸ்ட் மாதம் 19ஆம் திகதியன்று நீதிமன்றத்தில் ஆஜராகுமாறும் உத்தரவிட்டார்.

# முன்மொழிவுகளை முன்வைத்துள்ளன

“முன்மொழிவுகளை சமர்ப்பிப்பதற்கு ஏற்றுக்கொள்ளப்பட்ட அரசியல் கட்சிகளுக்கு வழங்கப்பட்ட காலம், ஜூலை 15ஆம் திகதியுடன் நிறைவடைந்துவிட்டது” என்றார்.

“இதுவரை 138 முன்மொழிவுகள் மற்றும் கருத்துகள் குழுவுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன” என குழுவின் செயலாளர், பாராளுமன்ற பணியாட்றொகுதியின் பிரதானியும் பிரதி செயலாளர் நாயகமுமான குஷானி ரோஹனத்தீர தெரிவித்தார்.

விதிகள் மீறல்

# 50 ஆயிரத்தை கடந்த கைதுகள்

## விபத்துகளும் அதிகரிப்பு



தனிமைப்படுத்தல் விதிகளை மீறிய குற்றச்சாட்டில் கைதுசெய்யப்படுவோரின் எண்ணிக்கை 50 ஆயிரத்தையும் கடந்துள்ளதாக, பொலிஸ் பேச்சாளர், சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

இதன்படி, கடந்தாண்டு ஒக்டோபர் மாதம் முதல் தனிமைப்படுத்தல் விதிகளை மீறிய குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை, 50,027 ஆக அதிகரித்துள்ளது.

இவர்களில் சுமார் 43,000 பேருக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டுள்ளதுடன், எஞ்சிய 7,000 பேருக்கு எதிராக வழக்கு தொடரப்படவுள்ளதாகவும் பொலிஸ் பேச்சாளர் தெரிவித்தார்.

தனிமைப்படுத்தல் விதிகளை மீறிய குற்றச்சாட்டில் நேற்று முன்தினம் மாத்திரம் 190 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் எனவும் பொலிஸ் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, தற்காலத்தில் வீதி விபத்துகள் பாரியளவில் அதிகரித்துள்ளதாக தெரிவித்த பொலிஸ் பேச்சாளர், சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண, நேற்று முன்தினம் (14) 9 பேர் விபத்துகளில் சிக்கி உயிரிழந்துள்ளனர் என சுட்டிக்காட்டினார்.

மோட்டார் சைக்கிளில் பயணித்த 7 பேர் இவ்வாறு உயிரிழந்துள்ளனர் எனவும் ஏனைய இருவரும் ஓட்டோவில் பயணித்தவர்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

தற்போது, மோட்டார் சைக்கிளில் பயணிப்பவர்களும், பாதசாரிகளும் விபத்துகளுக்கு உள்ளாகின்றமை அதிகரிப்பதால், அவதானத்துடன் செயற்படுமாறு அவர் அறிவுறுத்தியுள்ளார்.

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் தீ; இதுவரை 2,200 மெட்றிக் தொன்

# கழிவுகள் அகற்றல்



கொழும்புத் துறைமுகத்தை அண்மித்த கடற்பரப்பில், அண்மையில் தீப்பற்றிய எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலின் 2,200 மெட்றிக் தொன் கழிவுகள் இதுவரை கடல்பரப்புகளிலிருந்து அப்புறப்படுத்தப்பட்டுள்ளதென, கடல் சுற்றுச் சூழல் பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது.

குறித்த கப்பலின் அழுத்தம் காரணமாக, கரைக்கு அடித்து வரப்படும் கழிவுகளை அகற்றும் நடவடிக்கை ஆறு மாதங்களுக்குத் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படும் என கடல் சுற்றுச் சூழல் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் சட்டத்தரணி தர்ஷனி லகந்தபுர தெரிவித்துள்ளார்.


தற்போதும் கடற்பரப்பில் உள்ள கொள்கலன்களின் உள்ளடக்கங்களை கண்டறிய முடியாமல் இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மே மாதம் 21ஆம் திகதி கொழும்பு துறைமுகத்துக்கு அண்மித்த கடற்பரப்பில், எக்ஸ்பிரஸ் பேர்ள் என்ற கப்பல் தீப்பற்றிய எரிந்த நிலையில், அதன் பின்னர் ஏற்பட்ட கடல் மாசால் இதுவரை 176 ஆமைகள், 20 டொல்பின்கள் என்பன உயிரிழந்துள்ளதாக கடந்த மாதம் நீதிமன்றக்கு அறிக்கை வழங்கப்பட்டது.

எனினும், இவ்வாறு நீதிமன்றத்துக்கு அறிக்கை வழங்கப்பட்ட பின்னரும் இன்று வரை, நாட்டின் பல பிரதேச கடற்கரை ஓரங்களிலிரும் உயிரிழந்த நிலையில், ஆமைகள் உள்ளிட்ட கடல்வாழ் உயிரினங்கள் மீட்கப்பட்டு வருகின்றன.

# சுதந்திர வர்த்தக வலயத்தில் 3,429 பேருக்கு கொரோனா

டி.கே.ஜி.கபில



கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலயத்தில் பணிபுரிபவர்கள் அனைவருக்கும் கொரோனா தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ள நிலையில், நேற்று முன்தினம் (14) அங்கு 22 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என, கம்பஹா மாவட்ட பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் வைத்தியர் நளின் ஆரியரத்ன தெரிவித்துள்ளார்.

மேலும், கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலயத்துக்கு மேலதிகமாக, சீதுவ சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் நேற்று முன்தினம் (14) 17 தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலயத்தில் உள்ள 70 தொழிற்சாலைகளில் பணியாற்றும் 3,429 பேர் இதுவரை தொற்றுக்குள்ளாகியுள்ளனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# கலந்துரையாடல்

பாகிஸ்தான் உயர் ஸ்தானிகராலயத்தின் வர்த்தக மற்றும் முதலீட்டு இணைப்பாளர் திருமதி அஸ்மா கமால், காலி மாவட்ட வர்த்தக மற்றும் தொழில்துறை அலுவகத்துக்கு விஜயம்மேற்கொண்டிருந்தார். அவர், காலி மாவட்ட தலைவர், தலைமை நிர்வாக அதிகாரி மற்றும் முக்கிய உறுப்பினர்களை சந்தித்துக் கலந்துரையாடினார்.

இதன்போது, காலி பிராந்தியத்தின் தேயிலை மற்றும் வாசனை திரவிய பொருள்கள் (மசாலா) ஏற்றுமதியில் சிறப்பு கவனம் செலுத்தப்பட்டது. அத்தோடு, மருந்துகள், சுற்றுலா, தகவல் தொழில்நுட்ப சேவைகள் போன்ற துறைகளில் பாகிஸ்தான் மற்றும் இலங்கைக்கு இடையிலான இருதரப்பு வர்த்தகம் மற்றும் முதலீட்டு வாய்ப்புகள் குறித்து விரிவான கலந்துரையாடல் நடைபெற்றது.



நீர்கொழும்பில்

# ஆசிரியர் தொழிற்சங்கங்கள் ஆர்ப்பாட்டம்

எம் .இஸட் .ஷாஜஹான்

ஆறு கோரிக்கைகளை முன்வைத்து, நீர்கொழும்பில் ஆசிரியர் தொழிற்சங்கங்கள் ஆர்ப்பாட்டமொன்றை, நேற்று (15) காலை மேற்கொண்டன.

'அடக்குமுறைகளுக்கு எதிராக' என்ற தொனிப்பொருளில் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து நீர்கொழும்பு, மாரிஸ்டெல்லா கல்லூரி முன்பாக ஆசிரியர்கள், அதிபர்கள் இந்த ஆர்ப்பாட்டத்தை மேற்கொண்டனர்.

11 ஆசிரிய தொழிற்சங்கங்கள் இணைந்து இதனை ஏற்பாடு செய்திருந்தன. இவர்களுடன் நீர்கொழும்பு சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் பலரும் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

தொழிற்சங்க செயற்பாட்டாளர்களை அடக்குவதற்கு எதிராகவும், பலாத்காரமாக தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ள தொழிற்சங்க தலைவர்கள் உட்பட ஏனையோரை விடுதலை செய்யுமாறும், ஆர்ப்பாட்டம் செய்வதில் உள்ள உரிமைகளுக்கு மதிப்பளிக்குமாறும், ஆசிரியர்கள், அதிபர்களின் உரிமைகளை பாதுகாக்குமாறும், ஆசிரியர்கள், அதிபர்களின் சம்பள முரண்பாட்டை உடனடியாக தீர்க்குமாறும், கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழக சட்டமூலத்தை வாபஸ் பெறுமாறும் வலியுறுத்தி இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.



# இந்தியா -மாலைதீவு -இலங்கை முத்தரப்புப் பயிற்சி செயலமர்வு




இந்தியா -மாலைதீவு - இலங்கை ஆகிய நாடுகளின் கடற்படையினர் கலந்துகொண்ட 2021க்கான 'மெய்நிகர் முத்தரப்பு பயிற்சி செயலமர்வுகள்' (Virtual Trilateral Table Top Exercise -TTX) நேற்றும் (15) நேற்று முன்தினமும் (14) நடைபெற்றன.

இந்தியக் கடற்படையின் மேற்கு கடற்பிராந்திய CSO (Ops) ரியர் அட்மிரல் குர்சரண் சிங், இலங்கை கடற்படையின் நடவடிக்கைகளுக்கான பணிப்பாளர் நாயகம் ரியர் அட்மிரல் பி.எஸ். மஹாவிதான, மாலைதீவு தேசிய பாதுகாப்பு படையின் கேணல் ஹில்மி உள்ளிட்ட சிரேஷ்ட பிரதிநிதிகள் 14ஆம் திகதி புதன்கிழமை நடைபெற்ற TTX-2021 பயிற்சியின் ஆரம்ப நிகழ்வில் கலந்துகொண்டனர்.

மும்பையில் உள்ள கடல்சார் போர்முனை மையத்தால் இந்தப் பயிற்சிகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

டி.டி.எக்ஸ் -2021 பரஸ்பர புரிந்துணர்வை மேம்படுத்துவதோடு, பிராந்தியத்தில் போதைப்பொருட்களைக் கட்டுப்படுத்துதல் போன்ற கடல்சார் குற்றங்களை எதிர்ப்பதற்கான சிறந்த செயற்பாடுகளை பரிமாறிக்கொள்வதையும் கடல்சார் தேடல் மற்றும் மீட்பு ஆகியவற்றில் உதவிகளை வழங்குவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

எம்.வி.எக்ஸ் பிரஸ் பேர்ள் கப்பல் அனர்த்தத்தின்போது முன்னெடுக்கப்பட்ட வெற்றிகரமான ஒபரேஷன்சாகர்ஆரக்ஷா 2இன் அனுபவத்தில் இந்தப் பயிற்சி கூடுதல் கவனத்தைப் பெற்றது.

# ஒன்றிணைந்து செயற்பட்டால் நாட்டைக் கட்டியெழுப்பலாம்'

அரசியல்வாதிகளும் அரச சேவை ஊழியர்களும் ஒன்றிணைந்து செயற்பட்டால், நாட்டின் முன்னேற்றத்தை சிறந்த முறையில் கட்டியெழுப்பலாமென, கிராமிய வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை மற்றும் கட்டடப் பொருட்கள், கைத்தொழில் மேம்பாட்டு, இராஜாங்க அமைச்சர் இந்திக அனுருத்த தெரிவித்துள்ளார்.



கம்பஹா, யக்கல, வெரல்லவத்த பிரதேசத்தில் நடுத்தர வர்க்கத்தினருக்கு 154 வீடுகளை நிர்மாணிக்கும் திட்டத்தின் முதற்கட்ட வேலைகளை ஆரம்பிக்கும் வைபவத்தில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில் அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் அமைச்சர் கருத்துத் தெரிவிக்கையில்,

"சில இராஜாங்க அமைச்சர்களுக்கு வேலை செய்து கொள்ளமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்றுசொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இருந்தாலும் கூட, தங்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள அமைச்சுப் பதவிகளில் இருக்கும் வேலைப் பளுக்களைச் சரியான முறையில் திட்டமிட்டு நேரத்தின்படி செய்துவந்தால் அதனைச் சரியான முறையில் முடிக்கலாம்.

இதற்கு முன்னராக இராஜாங்க அமைச்சர்களுக்கு வர்த்தமானி மூலம், தங்களுடைய அமைச்சுப் பொறுப்புக்கள் கொடுக்கப்படவில்லை. ஆனால், தற்போதைய ஜனாதிபதி, வர்த்தமானி மூலம் இராஜாங்க அமைச்சர்களுக்குடைய பணிகளை பொறுப்புக் கொடுத்துள்ளார்" என்றும் தெரிவித்தார்.

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான இந்தக் காணியில் 5 ஏக்கர் நிலப்பரப்பை ஒதுக்கி முதலாவது கட்டத்தில் 12 மாடிகளைக் கொண்ட கட்டடத்தில் 154 வீடுகள் கட்டப்படவுள்ளன.

# தெற்கிலிருந்து வந்த பஸ்கள் திருப்பி அனுப்பப்பட்டன

துஷித குமார சில்வா



மாகாணங்களுக்கிடையில் பயணக் கட்டுப்பாடு அமல்படுத்தப்பட்டிருந்தாலும் அத்தியாவசிய சேவைகள் என தெரிவித்து, தென் மாகாணத்திலிருந்து கொழும்புக்குப் பயணித்த பெருமளவான பஸ்கள், நேற்றும் (15) நேற்று முன் தினமும் (14) திருப்பி அனுப்பப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அளுத்கம, பெந்தோட்டை, களுத்துறை பொலிஸார் ஒன்றிணைந்து, பெந்தோட்டை பாலத்துக்கு அருகில் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபட்ட நிலையில், தென் மாகாணத்தின் காலி, மாத்தறை, ஹம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களிலிருந்து அனுமதியின்றி வருகைத் தந்த பஸ்கள் இவ்வாறு திருப்பி அனுப்பப்பட்டுள்ளன.

# படகோட்டி 'பப்பி' கைது

போதைப்பொருள் பிரபல வர்த்தகரான 'பப்பி' என்றழைக்கப்படும் 36 வயதான நபரொருவர், தங்காலை பகுதியில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளார். இவர், ஒரு படகோட்டி எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

ஒரு தொகை போதைப்பொருளை, கடந்த பெப்ரவரி மாதம் தனது படகின் மூலமாக அவர், கரைக்கு எடுத்துவந்துள்ளார் என விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

போதைப்பொருள்களுடன் ஆயுதங்கள் சிலவற்றையும் அவர், கரைக்கு கொண்டுவந்துள்ளார் என விசாரணைகளின் ஊடாக கண்டறிப்பட்டுள்ளது என பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாரின் கண்களுக்கு மண்ணைத் தூவிக்கொண்டு பல நாள்களாக மறைந்திருந்த மேற்படி நபர், போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவினரால் நேற்று முன்தினம் (14) கைது செய்யப்பட்டுள்ளார்.



நஞ்சற்ற உணவு உற்பத்தி;

# கூட்டுறவுச் சங்கங்கள் முன்வர வேண்டும்



சேதனைப் பசளைத் தயாரிப்பினை ஊக்குவித்து, நஞ்சற்ற உணவுப் பொருட்களை உற்பத்தி செய்வதற்கு கூட்டுறவுச் சங்கங்கள் முன்வர வேண்டுமென கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் கூட்டுறவு சங்கங்களின் பதிவாளருமான ஏ.எல். எம். அஸ்மி தெரிவித்தார்.

சாய்ந்தமருது பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் (14) அச்சங்கத்தின் தலைமைக் காரியாலயத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கன்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில்,

சாய்ந்தமருது பலநோக்குக் கூட்டுறவுச் சங்கமானது, அதிகமான சொத்துகளைக் கொண்ட பாரியதொரு சங்கமாகும். தற்போதைய அதன் செயற்பாடுகள் வரவேற்கத்தக்கதாகும். இச்சங்கமானது திணைக்களத்தின் அறிவுறுத்தல்களை தொடர்ந்தும் பின்பற்றி, அபிவிருத்தி வேலைத் திட்டங்களை முன்னெடுக்க வேண்டும். கூட்டுறவுத்துறை இலஞ்சம், ஊழலற்ற துறையாக மிளிர்வதற்கு சங்கத்தின் இயக்குனர் சபையின் அர்ப்பணிப்பு மிக இன்றியமையாததாகும் எனத் தெரிவித்தார்.

**தேவை**

கொழும்பு-கடுவளையில் உள்ள முன்னணி ஒப்பந்தகார நிறுவனத்தில், உப-ஒப்பந்த அடிப்படையில் பெயின் வேலைச்செய்வதற்கு நன்கு தேர்ச்சிப்பெற்றவர் தேவை. தங்குமிட வசதி உள்ளது. தொடர்புகளக்கு 0777789419/ 0766101485

# தனிமைப்படுத்தலில் இருந்து மாமாங்கம் விடுவிப்பு

வா.கிருஸ்ணா

மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட மாமாங்கம் கிராம சேவையாளர் பிரிவு, நேற்று (15) அதிகாலை முதல் தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளது.

அதிகளவான கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டதைத் தொடர்ந்து, கடந்த 20 நாள்களாக இப்பிரதேசம் தனிமைப்படுத்தப்பட்டு வந்தது.



இந்நிலையில், குறித்த பகுதியில் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்ட அன்டிஜன், பி.சி.ஆர் பரிசோதனைகளின் அடிப்படையில் குறைந்தளவான தொற்றாளர்கள் இனங்காணப்பட்ட நிலையில், இப்பிரதேசத்தை விடுவிப்பதற்கான பரிந்துரையை தேசிய கொவிட் ஒழிப்பு செயலணிக்கு, மாவட்ட கொவிட் ஒழிப்பு செயலணி வழங்கியுள்ளது.

இதனடிப்படையில், மாமாங்கம் கிராம சேவையாளர் பிரிவு தற்போது விடுவிக்கப்பட்டுள்ளது. அதேநேரம் பிரதேசம் விடுவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, அதிகளவானோர் வீதிகளில் குவிந்து நிற்பதைக் காண முடிகின்றது.

அநாவசியமாக வெளியில் நடமாடுவதைத் தவிர்க்குமாறு தொடர்ச்சியாக அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுவரும் நிலையில், அதனை மீறும் வகையில் சிலர் செயற்படுவதையும் காண முடிகின்றது.

சிறுவர்களையும் ஒன்றுகூட்டி

# போதைக்கு எதிரான ஆர்ப்பாட்டம்

எம்.எம்.அஹமட் அனாம்

கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பிறைந்துரைச்சேனையில் அதிகரித்துள்ள போதைப்பொருள் வியாபாரம், போதைப்பொருள் பாவனையைக் கட்டுப்படுத்தக் கோரி, பிறைந்துரைச்சேனைப் பிரதேசத்தைச் சேர்ந்த பொதுமக்கள், வீதியில் இறங்கி நேற்று (15) ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அத்துடன், பிறைந்துரைச்சேனை பிரதேசத்தில் இருந்து ஆர்ப்பாட்டக்காரர்கள் நடைபவனியாக வாழைச்சேனை பிரதான வீதியூடாகச் சென்று, வாழைச்சேனை மாவட்ட நீதிவான் நீதிமன்றத்தின் முன்னாலும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஒரு சிலரின் நடவடிக்கையால் முழுப் பிரதேசத்துக்கும் அவப்பெயர் ஏற்பட்டு வருவதாகவும், போதைப்பொருளைக் கட்டுப்படுத்துவதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் அவர்கள் வலியுறுத்தினர்.



போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபடுவோர், அதைப் பாவிப்போருக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொண்டு, இப்பிரதேசத்தில் இருந்து போதைப்பொருளை இல்லாமல் செய்யுமாறு கோரி, வாழைச்சேனை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியிடம் மகஜரையும் அவர்கள் கையளித்தனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் பெண்கள், சிறுவர்கள் பெருமளவில் கலந்துகொண்டு, தமது எதிர்ப்பை வெளிக்காட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது.



# தும்பு உற்பத்திக்கு புதிய ஆரம்பம்

வ.சக்தி

நாட்டைக் கட்டியெழுப்பும் சுபீட்சத்தின் நோக்கு தேசிய வேலைத்திட்டத்தின் கீழ், கிராமிய உள்ளூர் உற்பத்திகளை ஊக்குவித்தல் தொடர்பாகவும் சுய பொருளாதாரத்தை ஊக்குவிப்பது தொடர்பாகவும் பல வேலைத்திட்டங்களை சமீப காலமாக மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு இணைத் தலைவருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் முன்னெடுத்து வருகின்றார்.

இதற்கமைய, கோறளைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட வாழைச்சேனை, நாசிவன் தீவு கிராமத்தில் தும்பு உற்பத்தித் தொழிற்சாலைக்கான அடிக்கல்லை நாட்டி, அதன் வேலைகளையும் நேற்று முன்தினம் (14) ஆரம்பித்து வைத்தார்.

இதன்போது, மாவட்டத் திட்டமிடல் பணிப்பாளர் திருமதி சசிகலா புண்ணியமூர்த்தி, கோறளைப்பற்று பிரதேச செயலாளர் கோ.தனபாலன், பிரதேச திட்டமிடல் பணிப்பாளர் கங்காதரன், கோறளைப்பற்று தவிசாளர் திருமதி சோபா ஜெயரஞ்சித் உள்ளிட்டோர் கலந்துகொண்டிருந்தனர்.

மின்சாரம் தாக்கி

# ஆறு வயது சிறுவன் பலி

வ.சக்தி, கனகராசா சரவணன், க.விஜயரெத்தினம்



மின்சாரம் தாக்கியதில் ஆறு வயதுச் சிறுவன் பலியாகிய சம்பவமொன்று, மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சின்ன ஊறணி பகுதியில் செவ்வாய்க்கிழமை (13) பதிவாகியுள்ளது.

மூன்று பிள்ளைகளைக் கொண்ட குடும்பத்தில் முன்றாவது பிள்ளையாகிய தரம் இரண்டில் கல்வி கற்ற விநாயகம் வினுஷ்ரன் என்ற சிறுவனே இவ்வாறு மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளான்.

சிறுவனது குடும்பம் வாழ்ந்து வந்த வீட்டை உடைத்து, புதிதாக நிர்மாணிக்கப்பட்டு வரும் நிலையில், அவ்வீட்டின் மின் இணைப்பு வேலைகள் இடம்பெற்று வந்தமையால், அவர்கள் அருகிலுள்ள வீடொன்றில் தங்கியிருந்துள்ளனர்.

இந்நிலையில், சம்பவ தினத்தன்று மாலை 6 மணியளவில் மேற்படி வீட்டுக்குள் சென்ற சிறுவன், மின்சாரம் தாக்கப்பட்ட நிலையில் வீழ்ந்துள்ளார்.

சிறுவன் வீழ்ந்து கிடந்ததைக் கண்ட உறவினர்கள், மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற நிலையில், சிறுவன் ஏற்கெனவே உயிரிழந்துள்ளதாக வைத்தியசாலை நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர்.

இரண்டு விபத்துகள்;

# வர்த்தகர் பலி; நால்வர் காயம்

க.விஜயரெத்தினம், அஸ்லம் எஸ்.மௌலானா



மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் இடம்பெற்ற இருவேறு மோட்டார் சைக்கிள் விபத்துகளில் வர்த்தகர் ஒருவர் பலியாகியுள்ளதுடன், நால்வர் காயமடைந்துள்ளனர்.

அம்பாறை, வளத்தாப்பிட்டி பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில், இரண்டு பிள்ளைகளின் தந்தையான எம். முஹம்மத் அஷாப் (வயது 41) எனும் சாய்ந்தமருதைச் சேர்ந்த வர்த்தகர் உயிரிழந்துள்ளார்.



அத்துடன், வர்த்தகருடன் பின் ஆசனத்தில் இருந்து பயணித்த அவரது உதவியாளர் படுகாயமடைந்து, அம்பாறை பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு உள்ளார்.

இதேவேளை, மட்டக்களப்பு, ஒந்தாச்சிமடத்தில் பிரதான வீதியில் நேற்று (15) காலை 9.20க்கு இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் மூவர் படுகாயமடைந்து, களுவாஞ்சிகுடி ஆதார வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர் என களுவாஞ்சிகுடி பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி உபுல் குணவர்த்தன தெரிவித்தார்.

எருவில், கோடைமேடு கிராமத்தை சேர்ந்த இருவர் தமது மோட்டார் சைக்கிளில் பயணித்த போது, ஒந்தாச்சிமடம் கிராமத்தின் உள்வீதியாக வந்த 60 வயதுப் பெண்ணொருவர், பாதையைக் கடப்பதற்கு முற்பட்ட வேளை இவ்விபத்து சம்பவித்துள்ளது.

நூற்றுக்கணக்கான

# கடலட்டை பண்ணை அமைக்க ஏற்பாடு

மு.தமிழ்ச்செல்வன்



வடமாகாணத்தில், நுற்றுக்கணக்கான கடலட்டை பண்ணை அமைப்பதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக, கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

கிளிநொச்சி, பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட இயக்கச்சியில், 'இயக்கி' உணவகத்தை, நேற்று (15) திறந்துவைத்த பின்னர் உரையாற்றும் போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்துரைத்த அவர், கௌதாரிமுனை கடலட்டை பண்ணையைத் தடுத்து நிறுத்தும் முகமாகத் தங்களது சுயலாப அரசியலுக்காக, சில கருத்துகளை சிலர் சொல்லி வருகின்றனர் என்றார்.

கடந்த ஆட்சியில் இலங்கை - சீனா கூட்டுறவாக அரியாலையில் அனுமதி பெற்று 4, 5 பரப்பில் தனியார் ஒருவருடைய காணியை குத்தகைக்குப் பெற்று, கடலட்டை இனப்பெருக்க நிலையமொன்று உருவாக்கப்பட்டது. அதன் பின்னர், அரியாலை பகுதியில் 10 ஏக்கர் நிலத்தை பெற்று, இனப்பெருக்கம் செய்யப்பட்ட கடலட்டை குஞ்சுகளை வளர்த்தெடுப்பதற்காக 'நேசரி' ஒன்று செய்திருக்கிறார்கள். குறித்த செயற்பாடு சரியாக அமையாத காரணத்தால், கௌதாரிமுனையில் உள்ள கடற்றொழிலாளர் சங்கங்களுடன் இணைந்து ஒரு பரீட்சார்த்தமாக கௌதாரிமுனையில் கடலட்டை பண்ணை அமைத்துள்ளது எனத் தெரிவித்தார்.

கேப்பாப்புலவைச் சூழ

# பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது

சண்முகம் தவசீலன், விஜயரத்தினம் சரவணன்



முல்லைத்தீவு - கேப்பாப்புலவு மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் பொலிஸார், விமானப் படையினர், இராணுவத்தினர் ஆகியோர் பாதுகாப்பை பலப்படுத்தினர்.

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் உள்ளிட்டவர்கள் கைதுசெய்யப்பட்டு பிணையில் விடுதலை செய்யப்பட்ட பின்னர், கேப்பாப்புலவில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

அவர்களது தனிமைப்படுத்தல் முறையற்றதெனக் கண்டித்து, முல்லைத்தீவு நகரம், கேப்பாப்புலவு விமானப்படை தளத்துக்கு முன்னால் நேற்று (15) ஆர்ப்பாட்டங்கள் நடைபெறவுள்ளதாக பொலிஸாருக்கு இரகசியத் தகவல் கிடைத்துள்ளது.

இதையடுத்தே, முல்லைத்தீவு நகரம், கேப்பாப்புலவு விமானப்படை முகாம் உள்ளிட்ட பகுதிகளில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது.

கேப்பாப்புலவு விமானப்படை தளத்துக்கு முன்னால் பொலிஸார், விமானப்படையினர், இராணுவத்தினர் குவிக்கப்பட்டு, கண்காணிப்பும் பாதுகாப்பும் தீவிரப்படுத்தப்பட்டது.

இதேவேளை, கேப்பாப்புலவு விமானப்படை தனிமைப்படுத்தல் முகாமுக்கு, இலங்கை ஆசிரியர் சங்க தலைவர் உள்ளிட்டவர்கள் வருவதைத் தடுப்பதற்காக பல்வேறு வீதிகளில் தடை ஏற்படுத்தப்பட்டதாகவும் அறியமுடிகிறது.

## ஜோசப் ஸ்டாலின் எச்சரிக்கை

செ.கீதாஞ்சன்

தனிமைப்படுத்தப்பட்டுள்ள தங்களை விடுவிக்காவிடின் இதையும் விட பாரிய செயற்பாட்டுக்குச் செல்லவுள்ளதாக, இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் ஜோசர் ஸ்டாலின் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

கடந்த எட்டாம் திகதியன்று, கொழும்பில் நடத்திய ஆர்ப்பாட்டத்தின் போது, கைதுசெய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டு, கேப்பாப்புலவில் உள்ள தனிமைப்படுத்தல் கண்காணிப்பு நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டுள்ள இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் உள்ளிட்ட செயற்பாட்டாளர்கள், தனிமைப்படுத்தல் கண்காணிப்பில் இருந்து கொண்டு தொடர்ச்சியான கவனயீர்ப்புப் போராட்டத்தை மேற்கொண்டு வருகின்றனர்.



இந்நிலையில், நேற்று முன்தினமும் (14) தனிமைப்படுத்தல் நிலையத்தில் இருந்து கொண்டு, தங்கள் எதிர்ப்பைத் தெரிவித்துள்ளார்கள்.

இது குறித்து இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் வெளியிட்டுள்ள காணொளியிலேயே, இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்த அரசாங்கம் சுகாதார வழிமுறைகளைப் பயன்படுத்தி, மக்களின் போராட்டங்களை நசுக்கும் செயற்பாடுகளை நிறுத்த வேண்டும்.

மக்களுடன் நாங்களும் இணைந்து, இந்த நாட்டில் ஜனநாயகம், சுதந்திரம் ஆகியவற்றை வெல்வதற்காகப் போராடுவோம் என்றும், அவர் மேலும் தெரிவித்துள்ளார்.




# ஆதிகோவிலடி முடக்கம்

எம்.றொசாந்த்

வல்வெட்டித்துறை - வடமேற்கு (ஜே388) கிராம அலுவலகர் பிரிவுக்குட்பட்ட ஆதிகோவிலடி பகுதி, தனிமைப்படுத்தல் சட்டத்தின் கீழ் முடக்கப்பட்டுள்ளது.

அந்தப் பகுதியில் கடந்த இரண்டு நாள்களில் 48 பேருக்கு கோரோனா வைரஸ் தொற்று உள்ளமை கண்டறிப்பட்டது.

அதனையடுத்து, பருத்தித்துறை சுகாதார மருத்துவ அதிகாரியால் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலாளருக்கும் வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கும் நேற்று முன்தினம் (14) இரவு முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கமைய, அப்பகுதி உடனடியாக தனிமைப்படுத்தப்பட்டுள்ளது.

அந்தக் கிராமத்தில் 310 குடும்பங்களைச் சேர்ந்த 940 பேர் வசிக்கின்றனர். இதேவேளை, பருத்தித்துறை முதலாம், இரண்டாம், மூன்றாம் குறுக்குத் தெருக்களிலும் சில பகுதிகள் முடக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பருத்தித்துறை

# சந்தையை மூடுவது தொடர்பில் ஆராய்வு



எம்.றொசாந்த்

பருத்தித்துறை பொதுச் சந்தையையும் அதை அண்டிய சந்தை மேற்கு பகுதியில் இருந்து, நேற்று (15) 5 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

பருத்தித்துறை பொதுச் சந்தையையும் அதனை அண்டிய மேற்கு பகுதியில், கொரோனா தொற்று இருக்கலாம் எனும் சந்தேகத்துக்கு இடமானோரிடம் நேற்று (15) முன்னெடுக்கப்பட்ட அதிவிரைவு அன்டிஜன் பரிசோதனையில் இருந்தே, ஐவருக்கு தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அவர்களில் மூவர், சந்தை வியாபாரிகள் என்றும் இருவர் சந்தை மேற்கு பகுதியைச் சேர்ந்தவர்கள் என்றும் சுகாதாரத் துறையினர் தெரிவித்தனர்.

இதையடுத்து, பருத்தித்துறை சந்தையை தற்காலிகமாக மூடுவதா அல்லது கட்டுப்பாடுகளுடன் இயங்க அனுமதிப்பதா என்பது தொடர்பில்,பருத்தித்துறை சுகாதார மருத்துவ அதிகாரியும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களும் ஆராய்ந்து வருகின்றனர்.



## நான்கு நாள்கள் கடந்தும் போராட்டம்...

■ பி.கேதீஸ்

தலவாக்கலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ட்றூப், கொரின் தோட்டத் தொழிலாளர்கள், அத்தோட்ட நிர்வாகத்துக்கு எதிராக, நேற்று (15) நான்காவது நாளாகவும் வேலை நிறுத்தப் போராட்டத்தை முன்னெடுத்தனர். இந்நிலையில், நேற்று முன்தினம் (14) மாலை ட்றூப் தோட்டத் தொழிற்சாலை முன்பாக அணிதிரண்ட அத்தோட்ட தொழிலாளர்கள், டயர்களை எரித்தும், பதாகைகளை ஏந்தியவாறும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.



ஆசிரியர்களை அவதூறாகப் பேசிய அமைச்சர்

# ‘பகிரங்க மன்னிப்பு கோர வேண்டும்’

### இராதா எம்.பி கோரிக்கை

■ டி.ஷங்கீதன்

இலங்கையின் ஆசிரியர் சமூகத்தை அவதூறாகக் கருத்துரைத்த அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல, ஆசிரியர்களிடம் பகிரங்கமாக மன்னிப்புக் கோர வேண்டுமென முன்னாள் கல்வி இராஜாங்க அமைச்சரும் மலையக மக்கள் முன்னணியின் தலைவருமான வேலுசாமி இராதாகிருஷ்ணன் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர், ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில்,

இந்த நாட்டில் இன்று, கொரோனா தொற்று ஏற்பட்டு பாடசாலைகள் முடங்கிக் கிடக்கின்ற சூழ்நிலையில், தங்களை முழுமையாக



அர்ப்பணித்துக் கொண்டு, தொழில்நுட்பத்தின் உதவியோடு மாணவர்களுக்கான கல்வியை, ஆசிரியர்கள் மிகவும் அர்ப்பணிப்போடு முன்னெடுத்து வருகின்றார்கள்.

இவ்வாறு அர்ப்பணிப்புடன் தங்களுடைய கடமைகளைச் செய்து கொண்டிருக்கின்ற ஆசிரியர்களை அவதூறாக ஓர் அமைச்சர் கருத்துத் தெரிவித்திருப்பது மிகவும் வெறுக்கத்தக்கதும் கண்டிக்கத்தக்கதுமான செயல் ஆகும்.

எனவே, இந்த விடயம் தொடர்பாக, அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல, ஆசிரியர் சமூகத்திடம் பகிரங்கமாக மன்னிப்புக் கோர வேண்டும் எனத் தெரிவித்தார்.

இன்று ஆசிரியர்களுக்கு ஏற்பட்டிருக்கின்ற இந்த நிலைமை, நாளை ஏனைய அரசாங்க உத்தியோகத்தர்களுக்கும் ஏற்படலாம். எனவே, ஆசிரியர்களுக்கு எதிராகக் கருத்துத் தெரிவித்துள்ள அமைச்சருக்கு எதிராக, பெற்றோர்கள் தங்களுடைய எதிர்ப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும். ஏனெனில் ஆசிரியர்கள் என்பவர்கள் மதிக்கத்தக்கவர்கள் என்றார்.

## அகல்யாவை வாழ்த்திய அரவிந்தகுமார் எம்.பி

■ எம். செல்வராஜா

பூப்பந்தாட்டம் (பெட்மின்டன்) தொழில்நுட்ப நிபுணத்துவ தெரிவுக் குழுவில், பதுளை மாவட்டத்தின் பசறையைச் சேர்ந்த செல்வி அகல்யா, தெரிவாகியிருப்பமை முழு மலையகத்துக்கும் மாத்திரமன்றி, குறிப்பாக பதுளை மாவட்டத் தமிழ் மக்களுக்குப் பெருமை சேர்த்துள்ளதென்று, பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அ. அரவிந்தகுமார் வாழ்த்தியுள்ளார்.

பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அ. அரவிந்தகுமார் விடுத்த அறிக்கையொன்றிலேயே, அவர் மேற்கண்டவாறு வாழ்த்தியுள்ளார்.

அந்த அறிக்கையில், பூப்பந்தாட்ட தொழில் நுட்ப நிபுணத்துவ தெரிவுக் குழுவில், முதல் உறுப்பினரான இவர் ஒலிம்பிக் போட்டிக்கும் தொழில்நுட்ப அலுவலராக, சர்வதேசம் செல்லும் முதல் இலங்கை தமிழ் ஆசிரியையாகவும் இருந்து வருகின்றார். இவர் தற்போது பசறை தமிழ்த் தேசிய கல்லூரியின் ஆசிரியையாகவும் உள்ளார்.

மலையகப் பெருந்தோட்ட இளைஞர், யுவதிகளுக்கு வாய்ப்புகள் கிடைக்குமாயின்,



அவர்கள் திறமைசாலிகள் என்ற ரீதியில், சர்வதேசமும் புகழும் வகையில், தெரிவாவது உறுதியாகும். இதற்கு செல்வி அகல்யா முன்னுதாரணமாவர்.

ஆகையால், எம்மவர்களுக்கு வாய்ப்புகள் கிடைக்காததாலேயே, அவர்கள் பின் தங்கிய நிலையில் இருந்து வருகின்றனர். அந்நிலையிலும், அவர்கள் திறமைசாலிகளாகவே தெரிவாகின்றனர். செல்வி அகல்யா, மென்மேலும் தனது திறமைகளை உறுதிப்படுத்தி, வாழ்க்கையிலும் உயர வேண்டுமென்று வாழ்த்துகின்றேன். அவரை உருவாக்கிய பெற்றோருக்கும் ஆசிரிய பெருந்தகைகளுக்கும், பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்கின்றேன் என்று தனது வாழ்த்து அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

புதிதாக வந்த பஸ்ஸுக்கு எதிர்ப்பு;

## பஸ் உரிமையாளர்கள் பணிப் பகிஷ்கரிப்பு

### பயணிகள் அசௌகரியம்



■ ரஞ்சித் ராஜபக்ஷ

ஹட்டன்- சலங்கந்த வீதியில் பயணிகள் போக்குவரத்துச் சேவையில் ஈடுபடும் தனியார் பஸ் உரிமையாளர்கள், நேற்று (15) பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

குறித்த வீதியில் போக்குவரத்துச் சேவையில் ஈடுபடும் தனியார் பஸ்களுக்கு மேலதிகமாக, மத்திய மாகாண வீதி போக்குவரத்து அதிகார சபையால் புதிதாக பஸ்ஸொன்று சேவையில் ஈடுபட, அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ளமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தே, இந்தப் பணிப் பகிஷ்கரிப்பு முன்னெடுக்கப்பட்டது.

புதிய அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக்கொண்ட குறித்த பஸ்ஸின் உரிமையாளர், நேற்று (15) ஹட்டனிலிருந்து சலங்கந்த வரை பஸ்ஸை செலுத்திய வேளை, சலங்கந்த பஸ் தரிப்பிடத்துக்கு அருகில் வைத்து, ஏற்கெனவே இப்பாதை ஊடாக சேவையில் ஈடுபடும் பஸ் சாரதிகள், நடத்துநர்களால் தடை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

நுவரெலியா மாவட்டத்திலுள்ள அரசியல்வாதியொருவரின் பரிந்துரைக்கமைய குறித்த புதிய போக்குவரத்து அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ளதாகவும் இது தொடர்பில், மத்திய மாகாண வீதிப் போக்குவரத்து அதிகாரசபையிடம் தமது எதிர்ப்பை முன்வைத்துள்ளதாகவும் பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ள பஸ் உரிமையாளர்கள் தெரிவித்தனர்.

இந்தப் பணிப் பகிஷ்ரிப்பு காரணமாக, பயணிகள் அசெகளரிங்களை எதிர்நோக்கியிருந்தனர்.

கல்விசார் பணியாளர்கள் அனைவரும்

## தடுப்பூசியை செலுத்தவும்

### ஹட்டன் வலயக் கல்விப் பணிப்பாளர் கோரிக்கை

■ கே.சுந்தரலிங்கம்

நுவரெலியா மாவட்டத்தில் இரண்டாவது நாளாகவும் ஆசிரியர்கள், அதிபர்கள், கல்விசாரா ஊழியர்கள் அனைவருக்கும் தடுப்பூசிகள் பெற்றுக்கொடுக்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இதற்கமைய, ஹட்டன் கல்வி வலயத்தில் சுமார் 3,200 ஆசிரியர்கள், அதிபர்கள், காரியாலய உத்தியோகஸ்தர்கள், உதவியாளர்கள், சிற்றூழியர்கள் என சுமார் 300 பேர் உட்பட 3,500 பேருக்கு நேற்று (15) முதல் எதிர்வரும் 19ஆம் திகதி வரை தடுப்பூசிகள் செலுத்தப்படவுள்ளன.

எனவே, பாடசாலை



மற்றும் கல்வித்துறையில் பணிபுரியும் அனைவரும் அரசாங்கம் இலவசமாக பெற்றுக்கொடுக்கின்ற இந்தத் தடுப்பூசியை செலுத்திக்கொண்டு, எதிர்கால கல்வி நடவடிக்கையை ஆரம்பிக்க உதவுமாறு, ஹட்டன் வலயக் கல்விப் பணிப்பாளர் பி.ஸ்ரீதரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

உமாஓயா திட்டத்தால்

## காணிகளை இழந்தவர்களுக்கு வெல்லவாயவில் காணிகள்

■ சுமணசிறி குணதிலக

உமாஓயா அபிவிருத்தி திட்டத்தின் கீழ், காணிகளை இழந்த குடும்பங்களுக்காக, வெல்லவாய பிரதேச செயலகப் பிரிவின் மஹாஆரகம பிரதேசத்தில் காணிகளை வழங்க, வெல்லவாய பிரதேச செயலகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

குறித்த, உமாஓயா திட்டத்துக்கு வெலிமட, ஹாலிஎல, வெல்லவாய, ஊவா பரணகம ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளில் வசித்த 395 குடும்பங்கள், தமது காணிகளை இழந்ததுடன் வெல்லவாய- மஹாஆரகம பிரதேசத்தில் சேனைப் பயிர் செய்கையில் ஈடுபட்ட 140 குடும்பங்களில் காணிகளும் திட்டத்துக்காக கையகப்படுத்தப்பட்டன.

இவ்வாறு பாதிக்கப்பட்ட ஒரு குடும்பத்துக்கு, ஒன்றரை ஏக்கர் காணி வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கான முதற்கட்ட கலந்துரையாடல், நேற்று முன்தினம் (14) வெல்லவாய- மஹிந்த ராஜபக்ஷ கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

போக்குவரத்துச் சிக்கல்கள்

## ஆளுநர் தலைமையில் கலந்துரையாடல்

■ சுமணசிறி குணதிலக

ஊவா மாகாணத்தில் பயணிகள் போக்குவரத்துச் சேவையில் காணப்படும் சிக்கல்கள் குறித்து, ஊவா மாகாண ஆளுநர் ஏ.ஜே.எம். முஸம்மில் தலைமையில், நேற்று முன்தினம் (14) கலந்துரையாடல் இடம்பெற்றது.

ஒன்றிணைந்த போக்குவரத்து கால அட்டவணையை செயற்படுத்தல், பஸ் தரிப்பிடங்களில் காணப்படும் பிரச்சினைகள், பொதுப் போக்குவரத்தில் உள்ள சிக்கல்கள், ஒன்றிணைந்த கால அட்டவணைக்கு அமைய தனியார் பஸ்கள் சேவையில் ஈடுபடாத போது, அதற்குப் பதிலாக வேறு பஸ்களை சேவையில் ஈடுபடுத்தும் போது ஏற்படும் பிரச்சினைகள் தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் ஊவா மாகாண பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் முகாமையாளர் டீ.பீ. ஆனந்த கருணாநாயக்க உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.



இராகலை ஸ்டாபோட் தோட்ட

## பொது நூலகத்தின் அவலநிலை

■ ஆ.ரமேஸ்.

வலப்பனை பிரதேச சபைக்கு உட்பட்ட இராகலை ஸ்டாபோட் தோட்டத்தில் இயங்கிவரும் பொது நூலகம், பல்வேறு குறைபாடுகளுடன் அடிப்படை வசதிகள் அறவே இன்றி இயங்கி வருகின்றது.

மண் சுவரால் அமைக்கப்பட்டுள்ள குறித்த நூலகம், மாட்டுப்பட்டி போல காட்சியளிக்கின்றது.

இந்த நூலகத்தின் தேவை, அவலநிலை குறித்து, பல அரசியல்வாதிகளிடம் முறையிட்டும் இதுவரை எவரும் அக்கறை காட்டவில்லை என்றும் ஸ்டாபோட் தோட்ட மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

அண்மையில் கூட நகருக்கு ஒரு நூலகம் நவீன வசதிகளுடனும் கணினி வசதியுடனும் இணைய வசதியுடனும் அமைக்கப்படுமென நுவரெலியா மாவட்ட இராஜாங்க அமைச்சர் தெரிவித்துள்ள நிலையில், இவ்வாறான நூலகங்கள் குறித்தும் கவனம் செலுத்துமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.



நாவலப்பிட்டி நகர சபையின்

## அதிகாரம் மொட்டு வசம்

■ எம்.கிருஸ்ணா

நாவலப்பிட்டி நகர சபையின் புதிய தலைவராக அமல் பிரியந்த தெரிவு செய்யப்பட்டுள்ள நிலையில், ஐக்கிய மக்கள் சத்தியின் வசமிருந்த நகர சபையின் அதிகாரம் ஸ்ரீ லங்கா பொது ஜன பெரமுன வசமாகியது.

நாலப்பிட்டி நகர சபையின் தவிசாளரான ஐக்கிய மக்கள் சத்தியின் சசங்க சம்பத், மத்திய மாகாண ஆளுநரால் பதவி நீக்கம் செய்யப்பட்டு, அது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டதையடுத்து, புதிய தவிசாளர் தெரிவுக்கான வாக்கெடுப்பு நேற்று (15) நாலப்பிட்டி நகர சபையில் இடம்பெற்றது.

இதன்போது, ஐக்கிய மக்கள் சக்தியின் சார்பில் போட்டியிட்டவருக்கு ஐந்து வாக்குகளும் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன சார்பில் போட்டியிட்ட அமல் பிரியங்கர 07 வாக்குகளும் கிடைத்துள்ளன.

இதற்கமைய, நகர சபையின் புதிய தலைவராக அமல் பிரியங்க தெரிவு செய்யப்பட்டார்.

ஸ்ரீ லங்கா பொது ஜன பெரமுன கட்சியின் சின்னம் தாமரை மொட்டு ஆகும்.



# மான்தோல் போர்த்தியிருக்கும் புலிகளும் பயிர்களை மேயும் வேலிகளும்

இணையத்தின் ஊடான பாலியல் செயற்பாடுகளுக்காக, 13 வயதான சிறுமியொருவர் விற்பனை செய்யப்பட்டமை கண்டறியப்பட்டதன் பின்னர், பல்வேறு மட்டங்களைச் சேர்ந்த 41 பேர், இதுவரையிலும் கைது செய்யப்பட்டுள்ளனர். அந்த வலையமைக்குள் நுழைந்தவர்களை அடையாளம் காண, பல கோணங்களிலும் விசாரணைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன.

இதில், மாலைத்தீவு முன்னாள் அமைச்சர், அரசியல்வாதிகள், வர்த்தகர்கள், வைத்தியர், மதகுருமார்கள், ஊடகவியலாளர், சமூக செயற்பாட்டாளர்கள், சட்டத்தரணிகள், கலைஞர்கள், அறைகளை வாடகைக்கு விட்ட ஹோட்டல் உரிமையாளர்களும் சிக்கியுள்ளனர்.

மேலே குறிப்பிட்ட தராதரங்களைச் சேர்ந்தவர்கள், எந்நேரத்திலும் சமூகத்துக்கு முன்மாதிரியாகச் செயற்பட வேண்டியவர்கள். ஆனால், இத்தகைய சமூக அஸ்தஸ்துக்குள் சிலர், மான்தோலை போர்த்திய புலிகளாக மறைந்திருந்து, மனிதச் சதையை புசித்திருக்கின்றமை வெட்கித்தலைக்குனிய வைக்கிறது.

மதிப்பையும் மரியாதையையும் கௌரவத்தையும் உயிரைப்போல் பேணிக் காக்கும் ஒரிருவரின் பேச்சுகளே, ஒரு சமூகத்தில் எடுபடும். ஏனையோரின் அறிவுரைகள், செவிடன் காதில் ஊதிய சங்கொலியாகக் காற்றோடு கலந்துவிடும். ஆக, மதிகெட்டதனமாக நடந்துகொள்ளக்கூடாது.

அந்த 13 வயதான சிறுமியை, அவருடைய தாயே விற்பனை செய்துள்ளார். அச்சிறுமி 10 வயதானவளாக இருந்தபோது, தந்தையால் பலதடவைகள் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். ஆக, தாயும் தந்தையும் முதலாவது, இரண்டாவது சந்தேக நபர்களாக குறிக்கப்பட்டுள்ளனர்.

பருவமடைந்த பெண்களும் சிறுமிகளும் உறவினர்கள், அயலவர்கள் போன்றோரால் வன்புணர்வுக்கு ஆளாவது புதிதல்ல; அதற்கப்பால், பெற்றோரால் வன்புணர்வுக்கு உட்படுத்தப்படும் சிறுமிகள், வேறொருவருக்கு விற்பனை செய்யப்பட்டுவிடுகின்றனர்.

விற்பனை செய்யப்பட்டு விட்டால், அங்கெல்லாம் கூட்டுவன்புணர்வுகளே இடம்பெறும் என்பது, கடந்தகால கசப்பான சம்பவங்கள் படம்பிடித்து காட்டியிருந்தன. நாவலப்பிட்டியில் இடம்பெற்ற சம்பவமும் தந்தையால் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டு, காதலனால் துன்புறுத்தப்பட்டு, இன்னும் சிலருக்கும் அச்சதை பகிரப்பட்டுள்ளது.

ஆக, எதையும் எப்படியும் ருசிக்கலாம் என்ற மனநிலையில் இருப்போரை மாற்றவேண்டும். அதற்கான முதற்படி, காலம் தாழ்த்தாது பகிரங்க தண்டனை வழங்குவதே, மான்தோல் போர்த்திய புலிகளுக்குப் படிப்பினையாக அமையும் எனப் பிரேரிக்கமுடியும். ஆனால், செல்வாக்கு, அந்தஸ்து போன்ற திரைகளுக்குள் மறைந்து நின்றுகொள்வதால், தண்டனைக்கான காலம் தாழ்த்தப்பட்டு விடுகின்றது.

இதுவே, குற்றவாளிகளுக்கு வாய்ப்பாக மாறி, தப்பித்து விடுகின்றனர். சில சம்பவங்களை பார்த்தால், சிறுமியாக இருந்தவேளை வன்புணர்வுக்கு உள்ளாகியவர், குடும்பமாகி குழந்தைகளுடன் இருக்கும்போதுதான், சந்தேகநபர் குற்றவாளியாக இனங்காணப்பட்டு, தண்டனை வழங்கப்படும்.

இவ்வாறான காலம் கடந்த தண்டனைகளின் ஊடாக, பயிர்களை மேயும் வேலிகளுக்குப் பாடம் புகட்ட முடியாது. ஆகையால், ஆகக் குறைந்தது, சிறுமிகளை வன்புணர்வுக்கு உட்படுத்துவோருக்கு, அதிரடியாகத் தண்டனை வழங்குவதற்காக, அவ்வாறான வழக்குகளைக் குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் விசாரித்து, முடிவுக்கு கொண்டுவரக்கூடிய வகையில் சட்டங்களில் திருத்தங்களை மேற்கொள்ளவேண்டும். இல்லையேல், சமூக ரீதியாக அதிகரித்துச் செல்லும் குற்றச்செயல்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கவே முடியாது.


## தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk




தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




## வாழ்வியல் தரிசனம்

வாய்மையுடன் வாழும் முறைமையைச் சின்ன வயதிலேயே பிள்ளைகளுக்குச் சொல்லிக்கொடுக்க வேண்டும்.

உண்மையை மட்டுமே பேசவேண்டும். எவர் சொல்லும் பொய்களையும் நம்பக்கூடாது. தெளிவுடன் பேசவேண்டும் எனச் சொல்லி வளர்த்தால், எல்லா இளம் தலைமுறைகளும் நல்லபடியாக, நற்பிரஜைகளாக உயர்வடைவர்.

சில பெற்றோர்கள், பிள்ளைகளின் முன்னிலையில் பேசக்கூடாதவைகளைப் பேசுவதுண்டு. எக்காரணம் கொண்டும் பொய்யான வாக்குறுதிகளைச் சொல்வதுகூட மகாபாவம். ஒருவரை ஏமாற்றுவது தன்னைத்தான் ஏமாற்றுவது போலானது.


உள்ளதை, உள்ளப்படி பேச துணிச்சல் வேண்டும். ஆனால், ஒருவர் மீது நம்பிக்கை, விசுவாசம் ஏற்பட்டால், அவரின் கூற்றுகளை ஏற்க யாவரும் முன் வருவார்கள்.

எனவே, நெஞ்சத்தூய்மையுடன் சத்திய வழியில் நடப்பதே வீரமாகும். வாய்மையே வாழ்வின் மேன்மை.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

### இலங்கையில் சீனா: விளங்கிக் கொள்ளலும் வினையாற்றலும் – 02

# தவிர்த்தும் தவிர்க்க முடியாத போர்கள்



தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

இலங்கையில் அதிகரிக்கும் சீனாவின் செல்வாக்கை விளங்கிக் கொள்வதாயின், சீனாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான நீண்டகால உறவின் அடிப்படையையும் அதன் நீட்சியாக, சீனாவின் அயலுறவுக் கொள்கை எவ்வாறானதாக அமைந்து வந்திருக்கிறது என்பதையும் நோக்குவது அவசியம்.

கடந்தவாரம், சீனாவின் அயலுறவுக் கொள்கையின் அடிப்படைகள் என்ன என்பதையும் இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையிலான உறவை உறுதிபட வைத்த 'அரிசி, இறப்பர் வர்த்தக உடன்படிக்கை' பற்றிப் பார்த்தோம். அதன் தொடர்ச்சியாக, 1950களிலும் 1960களிலும் சீனாவின் அயலுறவு நடத்தை பற்றிய பார்வை முக்கியமானது. அதிலும் குறிப்பாக, இந்தியாவுடனான உறவு முக்கியமானது.

சீனாவின் அயலுறவுக் கொள்கை, தொடர்ச்சியாக இந்தியாவினதோ அமெரிக்காவினதோ கொள்கைகளில் இருந்து மிகவும் வேறுபட்டதாக இருந்து வந்திருக்கின்றது. இந்த வேறுபாட்டை, சீனப் புரட்சியின் பின்னரான முதல் மூன்று தசாப்தங்களில் அதன் நடத்தையினூடு அவதானிக்கலாம்.

கொலனிய எதிர்ப்பு, ஏகாதிபத்திய எதிர்ப்பு ஆகியவற்றை மையப்படுத்திய விடுதலைப் போராட்டங்களை, சீனா நிபந்தனையின்றி ஆதரித்து வந்தது. அதேவேளை, தான் ஆதரித்த விடுதலைப் போராட்டம் வெற்றிபெற்ற பின்னர், யார் ஆட்சி அமைக்கவேண்டும் என்று எங்கேயும் எவரையும் வற்புறுத்தியதில்லை. இதை, பங்களாதேஷிலும் இலங்கையிலும் இந்திய நடத்தையுடன் ஒப்பிட்டால், முக்கியமான வேறுபாடுகள் விளங்கும்.

அதேபோல, எந்தச் சுதந்திர நாட்டினதும் இறைமையை மதித்தே, சீனா நடந்து வந்தது. எந்த நாட்டிலும் 'ஆட்சி மாற்றம்' ஒன்றைச் சீனா பரிந்துரைத்ததில்லை; அதற்கான காரியங்களில் இறங்கியதுமில்லை. இதை அமெரிக்காவின் கடந்த அரைநூற்றாண்டு கால அயற்கொள்கையுடன் ஒப்பிடுவது தகும்.

1949ஆம் ஆண்டு சீன விடுதலையின் போது ஹொங்கொங், மக்காவ் ஆகிய கரையோரப் பகுதிகள் முறையே பிரித்தானியாவிடமும் போர்த்துக்கல்லிடமும் இருந்தன. சீனா அவற்றை விடுவிக்க அவசரப்படவுமில்லை; அதற்காகப் போர்தொடுக்க முயலவுமில்லை. அப்பிரச்சினைகளைப் பேச்சுவார்த்தை மூலம் தீர்ப்பதே, சீன அணுகுமுறையாக இருந்தது.

ஏழு நூற்றாண்டுகளாகச் சீனாவின் பிரதேசமாக இருந்து வந்துள்ள திபெத் மீது, சென்ற நூற்றாண்டு முதல், பிரித்தானியாவுக்கு இருந்துவந்த விருப்பு இரகசியமல்ல. பிரித்தானிய கொலனிய விஸ்தரிப்புவாதிகளது அணுகுமுறையைப் பின்பற்றிய இந்திய ஆட்சியாளர்கள், திபெத்தைப் தமது பூரண செல்வாக்குக்கு உட்படுத்த விரும்பினர். இதுவே, சீன - இந்திய நல்லுறவின் சிதைவுக்குத் தொடக்க காரணமாயிற்று.

சீனாவும் இந்தியாவும் உலகின் அதிக சனத்தொகை கொண்ட நாடுகள். கொலனி ஆட்சியில் இருந்து இந்தியாவும் அயல் ஆதிக்கத்திலிருந்தும் பிரபுத்துவத்திலிருந்தும் சீனாவும் பெற்ற விடுதலைகள், கொலனி ஆட்சியிலிருந்து விடுபட்ட நாடுகளுக்கும் விடுதலைக்குப் போராடிக்கொண்டிருந்த நாடுகளுக்கும் மிகுந்த நம்பிக்கையைக் கொடுத்தன. 1950களில் விருத்திபெற்ற இந்திய-சீன நட்பும் அணிசேரா நாடுகளின் உருவாக்கமும் அந்நம்பிக்கைகளை மேலும் வலுப்படுத்தின. ஆனால், பின்னர் இந்திய-சீன உறவில் ஏற்பட்ட கசப்பு, நம்பிக்கைகளின் தளர்வுக்கும் முன்னாள் கொலனி ஆதிக்க நாடுகளின் களிப்புக்கும் காரணமாயின.

பிரித்தானிய கொலனி ஆட்சி, பல நாடுகளுக்கு இடையில் விட்டுச் சென்ற எல்லைப் பிரச்சினைகள் போல், சீனாவுக்கும் இந்தியாவுக்கும் இடையில் உருவாக்கிய பிரச்சினையை இரு நாடுகளும் தீர்க்கத் தவறியமை, இரு நாடுகளுக்கும் இடையில் எல்லை மோதல்களுக்கும் ஈற்றில் 1962இல் ஓர் எல்லைப் போருக்கும் காரணமானது. அதன் விளைவுகளிலிருந்து, இரு நாடுகளும் இந்து சமுத்திரப் பிராந்தியமும் இன்னமும் விடுபடவில்லை. இவ்விடத்தில், ஒரு விடயத்தை நாம் ஆழ்ந்து யோசிக்க வேண்டியுள்ளது. இந்திய-சீனப் பகையாகத் தெரிவதன் அடிவேரெனச் சிலர் கருதும் எல்லைப் பிரச்சினையையும் போரையும், திறந்த மனதுடன் விசாரிக்கும் தேவை நமக்குண்டு.

எல்லைத் தகராறைப் பேசித் தீர்த்திருக்க இயலாதா? போரைத் தவிர்த்திருக்க இயலாதா? மோதல்களும் போரும் ஏன் தவிர்க்கப்படவில்லை? இவை இரு நாடுகளின் மக்களும் விசாரிக்க வேண்டிய உண்மைகள் மட்டுமல்ல, இப்பிராந்திய மக்கள் அனைவரும் அறிந்து, அக்கறை காட்டவேண்டிய உண்மைகள் ஆகும்.

இந்தப் பிரச்சினை தொடர்பான உண்மைகள், தொடர்ச்சியாக மறைக்கப்பட்டு வந்துள்ளன. இது குறித்து ஆய்வாளரான ஏ.ஜி. நூரானி, சில ஆண்டுகளுக்கு முன்னர் எழுதிய India-China war: A true story என்ற கட்டுரை வாசிக்கத் தகுந்தது. அதில், அவர் சுட்டிக் காட்டுகின்ற ஓர் அம்சம், 'அந்தப் போர், இந்தியாவின் போர் அம்சத்தை விட, இராஜதந்திர அம்சத்தைப் பற்றிய பல விடயங்களைச் சொல்கின்றன. பேசித் தீர்த்திருக்கக்கூடிய பிரச்சினை ஒன்றைப் போரால் தீர்ப்பதென்ற நேருவின் முடிவு, இந்திய அயலுறவுக் கொள்கையின் மனநிலையைக் காட்டுகிறது. துரதிர்ஷ்டவசமாக அதே மனநிலை இன்னமும் இந்திய அயலுறவுக் கொள்கையை ஆளுகிறது' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

சீனாவுக்கு ஏனைய நாடுகளுடன் முரண்பாடுகள் இருந்துள்ளன. ஆனால், அவை தீர்க்கவியலாத பகையாக மாறாத வண்ணம், அதன் அயலுறவுக் கொள்கை இருந்துவருகிறது. மிகவும் நெருக்கடியான காலத்தில்கூட, அயலுறவுக் கொள்கை அடிப்படைகள் தக்கவைக்கப்பட்டுள்ளன.

உதாரணமாக, 1968 இல் செக்கோஸ்லாவாக்கியா மீதான சோவியத் ஒன்றியத்தின் படையெடுப்பை, சீனா வன்மையாகக் கண்டித்தது. தத்துவார்த்த ரீதியில் சோசலிசத்துக்கான பாதை பற்றிய விவாதத்தின் விளைவான, சீனாவுக்கும் சோவியத் ஒன்றியத்துக்கும் இடையிலான முரண்பாடு, 1961 இல் முற்றிய பின்னணியில், சீனாவுக்கு எதிரான பல நடவடிக்கைகளை, சோவியத் ஒன்றியம் எடுத்த போதும், 1969 வரை இராணுவ மோதல் நிகழவில்லை.

சோவியத் ஒன்றியத்தின் படையெடுப்பை விமர்சிப்பதில், சீனாவின் நிலைப்பாடு மூன்றாமுலகிலும் வரவேற்பைப் பெற்றது. அதன் விளைவாகவே சீனாவின் வடக்கு எல்லையில் உள்ள வுசூலி ஆற்றின் நடுவில் உள்ள ஒரு தீவைப் பற்றிய தகராறை, சோவியத் ஒன்றிய அரசாங்கம், சீனாவுக்கு எதிரான தாக்குதலுக்கு ஒரு வசதியாக்கியது. இம்மோதல் மூலம் சீனா, சோவியத் ஒன்றிய உறவு மேலும் முறுகலுக்கு உள்ளானது.

இதேபோலவே, ஹோசிமின் காலத்தில் மிக நெருக்கமாயிருந்த சீனா-வியட்நாம் உறவு, 1970இல் சோவியத் ஒன்றிய சார்பாளர்கள் அதிகாரத்துக்கு வந்த பின்பு குறிப்பாக, 1975 இல் அமெரிக்கா தோற்கடிக்கப்பட்ட பின்பு, வியட்நாமில் சோவியத் ஒன்றியத்தின் செல்வாக்கு வலுப்பட்டது.

அதுமட்டுமன்றி, தென்கிழக்காசியாவில் சீனச் செல்வாக்கைத் தடுக்கின்ற விதமாக, வியட்நாமைப் பயன்படுத்த சோவியத் ஒன்றியம் முற்பட்டது. வியட்நாமியப் படைகள், கம்போடியாவுக்குள் நுழைந்தமை அதில் நடுப்பகுதியாகும். இப்பின்னணியில் 1978 இல் சீன - வியட்நாமிய மோதல் ஒன்று நிகழ்ந்தது.

இந்த இரண்டு உதாரணங்களும் சொல்கின்ற யதார்த்த அரசியல் யாதெனில், போரை முதன்மைப்படுத்தாத, விரும்பாத அயலுறவுக் கொள்கையில் கூட, சில சந்தர்ப்பங்களில் போர் தவிர்க்க முடியாதாகி விடுகிறது. ஆனால், அப்போரிலிருந்து சுமூகமான உறவுக்கு எவ்வாறு மீள்வது என்பது, அயலுறவுக் கொள்கையிலும் அதன் நடைமுறைப்படுத்தலிலும் தங்கியுள்ளது. இவ்விடயத்தில், சீனா கவனமான நடந்துள்ளது.

எந்த மோதலும், நிரந்தரமாக நீடித்த எல்லை மோதலாகாமல் கவனித்துக் கொள்ளப்பட்டதோடு, அவை குறுகிய காலத்திலேயே முடிவுக்குக் கொண்டு வரப்பட்டன. அதைவிடச் சீனாவை அண்டியுள்ள பாகிஸ்தான், மியான்மார், கொரியா, வியட்நாம், லாரஸ், தாய்லாந்து, மொங்கோலியா, ரஷ்யா உட்பட்ட எல்லா நாடுகளுடனும் தரை எல்லைகள் பற்றிய முரண்பாட்டைச் சுமூகமாகவே தீர்த்துள்ளது எனலாம்.

1976இல் மாவோவின் மறைவைத் தொடர்ந்து, முதலாளித்துவப் பாதையில் சீனா நடக்கத் தொடங்கியது. இது சீனாவின் உள்ளார்ந்த சமூகப் பொருளாதார மாற்றங்களுக்கு வழிகோலியது. ஆனால், சில பத்தாண்டுகளுக்கு அவை அப்போது நடைமுறையில் இருந்த சீனாவின் அயலுறலுக் கொள்கையில் பாரிய மாற்றங்களை ஏற்படுத்தவில்லை.

அதேவேளை, 1978இல் இலங்கையில் ஏற்பட்ட பாரிய அயலுறவுக் கொள்கை மாற்றம், முழுமையான அமெரிக்க சார்பு நிலைப்பாட்டை, இலங்கை எடுக்க வழிகோலியது. இது சீனாவை ஒருபுறமும் இந்தியாவை மறுபுறமுமாக எதிர்த்தது.

இலங்கையின் அமெரிக்கச் சார்பு நிலைப்பாடும் திறந்த பொருளாதாரக் கொள்கையின் அறிமுகமும் சீன-இலங்கை உறவில் முக்கியமான மாற்றங்களை ஏற்படுத்தின. இதில் முக்கியமானது, 1952 முதல் இருந்து வந்த 'அரிசி, இறப்பர் வர்த்தக உடன்படிக்கை' முடிவுக்குக் கொண்டுவரப்பட்டமை ஆகும்.

அரிசி உற்பத்தியில், இலங்கை தன்னிறைவு அடைந்துவிட்டது என்ற காரணம் காட்டப்பட்டு, 1982இல் அது நிறைவுறுத்தப்பட்டது. அதேயாண்டு, இலங்கையில் இனமுரண்பாட்டின் புதிய அத்தியாயம் தொடங்கியது.

இருநாடுகளுக்கும் இடையிலான 'அரிசி - இறப்பர் வர்த்தக உடன்படிக்கை'யை சாத்தியமாக்கிய ஆர்.ஜி. சேனாநாயக்க, இதுதரப்புப் பேச்சுவார்த்தை குறித்து அமைச்சரவைக்கு வழங்கிய குறிப்பில், சீனாவின் நடத்தை குறித்து பின்வருமாறு குறிப்பிடுகிறார்: 'சீனத் தரப்பு குறித்த உடன்படிக்கை பற்றிப் பேரம்பேசுவதில் அக்கறை காட்டவில்லை. ஆனால், சின்னச் சின்ன விடயங்களும் சரியாக இருக்க வேண்டும் என்று அடம்பிடித்தார்கள் என்பதை எம்மால் அவதானிக்க முடிந்தது. அதேவேளை, அவர்கள் தங்கள் நடத்தையூடாக, பெரிய மனது உடையவர்களாகவும் வெளிப்படையானவர்களாகவும்

## கடிதங்கள்

### கொவிட்-19 தடுப்பூசி செலுத்தல்:

### கல்முனை புறக்கணிக்கப்படுவது ஏன்?

கொரோனா வைரஸ் தடுப்பூசிகள் செலுத்தப்படும் செயற்பாடுகள் துரிதமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்ற போதிலும், கல்முனை பிராந்தியத்தில் மாத்திரம் ஏன் முன்னெடுக்கப்படவில்லை என பொதுமக்களும் அரச அலுவலர்களும் விசனம் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மௌனம் காப்பது தொடர்பிலும் கவலை அடைந்துள்ளனர். குறிப்பாக, கல்முனை பிராந்தியத்தில் உள்ள பெரும்பாலான அரச திணைக்களங்கள், தமது அன்றாட நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்ற நிலையில், மக்களும் கட்டுப்பாடுகள் இன்றி தமது அன்றாடக் கடமைகளில் ஈடுபட்டுவருகின்றனர். ஆனாலும் எந்தவோர் உத்தியோகத்தருக்கோ பொதுமக்களுக்கோ தடுப்பூசி செலுத்தப்படவில்லை.

ஆனாலும், பிற பிரதேசங்களில் வீடுகளில் பாதுகாப்பாக இருக்கும் பொதுமக்களுக்குக் கூட, இரண்டாவது தடவையும் தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது. இந்நடவடிக்கையால், கல்முனை பிராந்தியத்தில் வாழும் மக்கள், அரசாங்கத்தின் மீது நம்பிக்கை இழந்துள்ளதுடன் தாம் புறக்கணிக்கப்படுகின்றோமா எனவும் கேள்வி எழுப்புகின்றனர்.

சுகாதாரத்துறை அதிகாரிகள், விரைவில் தடுப்பூசி வழங்கப்படும் எனப் பலமுறை உறுதி அளித்தும் இதுவரையில் ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும் குற்றம் சுமத்தப்படுகின்றது. ஆகவே, இது தொடர்பில் சம்மந்தப்பட்டவர்கள் விரைவான நடவடிக்கை எடுத்து, மக்களைப் பாதுகாக்க ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்க வேண்டும் என, கோரிக்கை முன்வைக்கப்படுகின்றது.

–வி. சுகிர்தகுமார்

புதுடெல்லி

# ‘கடன் கொடுத்தால் திருப்பிக் கேளாதீர்’

4 வயதான மூதாட்டியை கொடூரமாக கொலை செய்து, அவரது உடலைத் துண்டு துண்டாக வெட்டி வீசிய சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. இந்தக் கொடூர கொலை தொடர்பாக பக்கத்து வீட்டில் வசித்த கணவனையும் மனைவியையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.




72 வயது மூதாட்டி, பக்கத்து வீட்டில் வசித்த தம்பதியினருக்கு ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபாயைக் கடனாகக் கொடுத்துள்ளார். ஜூன் மாதம் 30ஆம் திகதி இரவு, மூதாட்டி பணத்தைத் திருப்பிக் கேட்டுள்ளார். இதனால் ஏற்பட்ட தகராறில், கணவன்-மனைவி இருவரும் சேர்ந்து, தனியாக இருந்த மூதாட்டியைப் பலமாகத் தாக்கிக் கொலை செய்திருக்கிறார்கள்.

இது தொடர்பில் தெரிய வருவதாவது: கணவனும் மனைவியும் மூதாட்டியின் உடலை வெட்டி, சாக்கடையில் போட்டுவிட்டதாகவும், இதற்காக இரவு முழுவதும் மூதாட்டியின் வீட்டிலேயே இருந்து இரத்தக் கறையை அழித்ததாகவும் பொலிஸில் கொடுக்கப்பட்டுள்ள வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளனர். உடலை எடுத்துச் செல்வது சி.சி.டி.வி கெமராவில் பதிவாகியிருந்தது.

மூதாட்டியின் உடலை மூன்று துண்டாக வெட்டி, அங்கிருந்த சாக்கடையில் கொண்டு சென்று போட்டுள்ளார்கள். சாக்கடையில் தூக்கி போடுவதற்கு முன்னரே சடலத்தில் இருந்த நகைகளை எடுத்துள்ளனர். அந்த நகையை ஒரு நிதி நிறுவனத்தில் அடகு வைத்து 70,000 ரூபாய் பெற்றுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

நாமக்கல்

## நோயை குணப்படுத்த 22 கோடி தேவை



நாமக்கல் மாவட்டம், குமாரபாளையம் காந்திநகரை சேர்ந்த இரண்டு வயது மகளுக்கு கடந்த ஒரு மாதமாக அரியவகை மரபணு நோய் என்று அழைக்கப்படும் முதுகு தண்டுவட நார்சிதைவு நோய்க்குள்ளாகி சிரமத்தை சந்தித்து வருகிறாள். தற்போது, இச்சிறுமியால் நடக்க கூட முடியவில்லை. மேலும் உரிய மருத்துவம் அளிக்காவிட்டால், அவளது உயிருக்கு ஆபத்து ஏற்படும் சூழல் உள்ளது.

இச்சிறுமிக்கு சிகிச்சை அளிக்க, வெளிநாட்டில் இருந்து மருந்து இறக்குமதி செய்ய இறக்குமதி வரியுடன் ரூ.22 கோடி தேவைப்படுகிறது. இதையடுத்து அந்த மருந்துக்கான இறக்குமதி வரியை இரத்து செய்யுமாறு பிரதமர் மோடிக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உள்ளிட்ட பலர் வேண்டுகோள் விடுத்தனர்.

இந்த நிலையில், அந்த மருந்துக்கான இறக்குமதி ஜி.எஸ்.டி. வரியை மத்திய நிதிஅமைச்சர் நிர்மலா சீதாராமன் நீக்கி இருப்பதாக தகவல் வெளியாகி உள்ளது.

திருமலை

## நவீன தொழில் நுட்பத்துடன் ஏழுமலையான் கோவில்

திருப்பதி ஏழுமலையான் கோவில் நவீன தொழில் நுட்பத்துடன் உலகின் அதிக பாதுகாப்பாக மாற்றப்படவுள்ளது. அதற்காக, திருமலை முழுவதும் கூடுதலாகக் கண்காணிப்பு கெமராக்கள் பொருத்தப்பட உள்ளன.




தற்போதுள்ள கண்காணிப்பு கெமராக் கட்டுப்பாட்டு மையத்தை தேவஸ்தான முதன்மைச் செயல் அலுவலர் ஜவகர்ரெட்டி பார்வையிட்டு ஆய்வு செய்தார். அப்போது அவர், திருமலையில் வலுவான பாதுகாப்பு ஏற்பாடுகளை அமைக்குமாறு தேவஸ்தான பாதுகாப்பு மற்றும் பறக்கும்படை அதிகாரியிடம் கேட்டுக்கொண்டார்.

தேவஸ்தான பாதுகாப்பு மற்றும் பறக்கும்படை அதிகாரி கோபிநாத் ஜாட்டி இது தொடர்பில் கூறியதாவது:

திருப்பதி ஏழுமலையான் கோவில் மற்றும் பக்தர்களின் பாதுகாப்பு நலன் கருதி, திருமலை முழுவதும் அனைத்துப் பகுதிகளிலும் தற்போது 1,654 கண்காணிப்பு கெமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன. அதில் 1,530 கெமராக்கள் பொதுக் கட்டுப்பாட்டு மையத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. திருப்பதி ஏழுமலையான் கோவில் நவீன தொழில் நுட்பத்துடன் உலகின் மிகச் சிறந்த பாதுகாப்பான கோவிலாக மாற்றப்பட உள்ளது. அதற்கானப் பணிகள் நடந்து வருகிறது என்றார்.

சென்னை

## நீதியின் குரலே தேசிய குரல்



காவிரி விவகாரத்தில் நீதியின் குரலே தேசிய குரலாக ஒலிக்க வேண்டுமெனத் தெரிவித்த மக்கள் நீதி மய்யம் கட்சி தலைவர் கமல்ஹாசன், ‘நடந்தாய் வாழி காவிரி’ என்று பாடும் நம்மை, ‘நின்றாய் நீ காவிரி’ என்று வாடும் நிலைக்கு தள்ளுகிறது கர்நாடகா எனத் தெரிவித்து அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

தடையேதும் இன்றி ஓடிக்கொண்டிருந்த நதியில் கர்நாடகா, பல அணைகளைக் கட்டிவிட்டது. மேலும், ஓர் அணையை கட்டி தமிழக விவசாயிகள் வாழ்வை கேள்விக்குறியாக்க நினைக்கிறது.

இரு மாநிலங்கள் நதிநீர் பங்கீட்டு பிரச்சினையைத் தீர்க்க வேண்டிய மத்திய அரசாங்கம் அதனை உணரவில்லை. அரசியல் காரணங்களுக்காக மத்திய அரசாங்கம் கர்நாடக பக்கம் சாய்ந்திருக்கிறது. மேகதாது விவகாரத்தில் இந்த அநீதி போக்கு தொடர்வது நியாயமில்லை.

திருவனந்தபுரம்

## வரதட்சணை கொடுமை கேரள ஆளுநர் உண்ணாவிரதம்



வரதட்சணைக் கொடுமை, பெண்களுக்கு எதிரான வன்முறைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் நோக்கத்தில், கேரள ஆளுநர் ஆரிப் முஹம்மது கான், ஒரு நாள் உண்ணாவிரதமொன்றை மேற்கொண்டிருந்தார்.

கேரளாவைச் சேர்ந்த விஸ்மயா என்ற பெண், சமீபத்தில் தற்கொலை செய்து கொண்டார். இவரது கணவர், அவரது குடும்பத்தினர், வரதட்சணை கேட்டு விஸ்மயாவை துன்புறுத்திக் கொன்றதாக, அவரது பெற்றோர் புகார் தெரிவித்தனர்.

இந்நிலையில், “வரதட்சணை கொடுமை, பெண்களுக்கு எதிரான வன்முறைகளை முடிவுக்கு கொண்டு வர, மக்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். இது தொடர்பான விழிப்புணர்வு பிரசாரத்தில் பங்கேற்க தயாராக இருக்கிறேன்” என, கேரள ஆளுநர் ஆரிப் முஹம்மது கான் தெரிவித்துள்ளார்.

பெங்களூர்

இறந்ததாகக் கூறிய குழந்தை கடத்தப்பட்டது

## உயிருடன் மீட்டு பெற்றோரிடம் ஒப்படைப்பு

பெங்களூர், பாதராயனபுராவில் பிறந்த குழந்தையை இறந்துவிட்டதென பொய் சொல்லிக் கடத்திய சம்பவம் தொடர்பில் தெரியவருவதானது:

பெங்களூரில் 2020ஆண்டு மே 29ஆம் திகதி, அரசாங்க மருத்துவமனையில், ஆண் குழந்தையொன்று பிறந்துள்ளது.பிறந்த குழந்தை இரண்டு மணி நேரத்தில் கடத்தப்பட்டுள்ளது. விசாரணை நடத்திய பொலிஸார், ஓராண்டுக்கு பின்னர், பெண் டொக்டரை கைது செய்தனர். இவரை விசாரணை செய்த போது, குழந்தையை 15 இலட்சம் ரூபாய்க்கு விற்பனை செய்தமை தெரியவந்துள்ளது.

நீதிமன்றத்தின் உத்தரவுபடி, டி.என்.ஏ பரிசோதிக்கப்பட்டது. இதில் உண்மையான பெற்றோருடைய டி.என்.ஏ. குழந்தையின் டி.என்.ஏயும் ஒன்றானதால்,குழந்தை பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டது.



## உதவிய கரங்கள்...

ஆ.ரமேஸ்.

இராகலை ஸ்டாபோட் தோட்டத்திலிருந்து ட்ரெக்டரில் தொழிலுக்குச் சென்றுகொண்டிருந்தபோது, அந்த ட்ரெக்டர் விபத்துக்குள்ளாகியதில் பாதிக்கப்பட்டோர், கடந்த 02 மாதங்களாக தொழிலின்றி, வாழ்வாதாரத்தையும் இழந்திருந்தனர். அந்தக் குடும்பங்களுக்கான உலருணவுப் பொதிகள், ஊவா மாகாண மலையக விழிகள் உதவும் கரங்கள் அமைப்பால், செவ்வாய்க்கிழமை (13) வழங்கிவைக்கப்பட்டது.

அவ்வமைப்பின், தலைவர் எஸ்.குகநேசன், பொருளாளர் ஜே.நேசன் ஆகியோரின் வழிகாட்டலுக்கு அமைய முன்னெடுக்கப்பட்ட உதவும் கரங்கள் பணியின் 53 ஆவது பணி இதுவாகும்.

இதேவேளை, விசேட தேவையுடைய அதே தோட்டத்தைச் சேர்ந்த சிறுவனுக்கும் சக்கரக் கதிரையும் வழங்கி வைக்கப்பட்டது.




## ‘இயக்கி’ இயங்குகிறது

நலிவுற்ற பெண்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில், பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்தால் உருவாக்கப்பட்ட ‘இயக்கி’ உணவு விற்பனை நிலையத்தை, கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, நேற்று (15) திறந்துவைத்தார். ஐ. நா அபிவிருத்தி நிதியத்தின் நிதிப் பங்களிப்பில், உருவாக்கப்பட்டுள்ள இந்த உணவகத்தில் பாரம்பரிய உணவுகள் விற்பனை செய்யப்படவுள்ளன.

# ஊர் வலம்...



## மரக்கன்றுகள் கையளிப்பு...

திருகோணமலை, கோமரங்கடவல பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட 622 பயனாளிகளுக்கு டோம் ஜேசி மா மரக்கன்றுகள் விநியோகிக்கும் நிகழ்வு , கிழக்கு மாகாண ஆளுநர் அநுரதா யஹம்பத்தின் ஆதரவின் கீழ், கோமரங்கடவல பிரதேச செயலகத்தில் நேற்று முன்தினம் (14) நடைபெற்றது.

திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கபிலா நுவான் அதுக்கோரள, திருகோணமலை மாவட்ட செயலாளர் சமன் தர்ஷனா பாடிகோரளவின் வழிகாட்டலில் இத்திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது. கிராம வளர்ச்சித் திட்டத்தின் கீழ், திருகோணமலை மாவட்டத்தில் இதுவரை 15,000 டோம் ஜேசி மா மரக்கன்றுகள் வழங்கப்பட்டுள்ளன.

(படங்களும் தகவலும் ஒலுமுதீன் கியாஸ் )



## உணவுப் பொதிகள் அன்பளிப்பு

கொரோனா தொற்றுக் காரணமாக வாழ்வாதாரத்தை இழந்த குடும்பங்களுக்கு உதவும் வகையில், மருதமுனை சுலைஹா பவுன்டேசனின் ஏற்பாட்டில், மர்ஹூம் கலாநிதி முகைதீன் பாவாவின் புதல்வர்களான தாஹா, ஒமர் ஆகியோரின் மூன்று இலட்சம் ரூபாய் நிதியில் 150 குடும்பங்களுக்கு தலா 2,000 ரூபாய் பெறுமதியான உலருணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்ட நிகழ்வு நேற்றுமுன்தினம் (14) நடைபெற்றது.

பவுன்டேசனின் தலைவர் எம்.ஐ.எம்.ஏ. காதர் வாழ்வாதாரத்தை இழந்த குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகளை வழங்கி வைத்தார்.

பி.எம்.எம்.ஏ. காதர்

ஈரான்

# ‘யுரேனியத்தை 90 சதவீதம் செறிவூட்ட முடியும்’

ஆயுதத் தரத்திலான 90 சதவீதம் யுரேனியத்தை தேவைப்பட்டால் செறிவூட்ட முடியும் என நேற்று முன்தினம் ஈரான் தெரிவித்துள்ளது.

எவ்வாறெனினும், இன்னும் 2015ஆம் ஆண்டு அணு ஒப்பந்தத்தை மீளக் கொண்டு வர எதிர்பார்ப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அமைச்சரவை சந்திப்பு ஒன்றிலேயே குறித்த கருத்தை ஈரானிய ஜனாதிபதி ஹஸன் றொஹானி வெளிப்படுத்தியதாக அந்நாட்டு அரச ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.



இந்நிலையில், அடுத்த மாதம் ஐந்தாம் திகதி ஜனாதிபதி றொஹானியை, இப்ராஹிம் றைசி பிரதியிடவுள்ளார்.

அந்தவகையில், அணுப் பேச்சுகளில் கடுமையான நிலையை எடுக்க றைசி திட்டமிட்டுள்ளதாக இரண்டு சிரேஷ்ட ஈரானிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.




## ஒட்சிசனுக்கான காத்திருப்பு...

மியான்மாரில் பிந்தைய கொரோனா அலை தாக்கியுள்ள நிலையில் ஒட்சிசனுக்காக காத்திருக்கின்றனர்.

பாகிஸ்தான்

பஸ் வெடிப்பில்

# சீனர்கள் உட்பட 13 பேர் பலி


வட பாகிஸ்தானில், நேற்று முன்தினம் (13) பஸ் ஒன்றின் மீதான குண்டுத் தாக்குதலில், ஒன்பது சீனர் உட்பட 13 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

இச்சம்பவத்தை குண்டுத் தாக்குதல் என சீனா தெரிவித்தபோதும், வாகனக் கோளாறு என பாகிஸ்தான் தெரிவித்துள்ளது.

வெடிப்பையடுத்து பள்ளத்தாக்கு ஒன்றுக்குள் பஸ் சென்ற நிலையில் இரண்டு பாகிஸ்தான் படைவீரர்களும் கொல்லப்பட்டதாக, பொலிஸார் தெரிவித்துள்ளனர். இந்த வெடிப்பு நிகழ்ந்த மேற்கு ஹாபர்-பக்துவங்கா மாகாணத்தில், சீனாவின் பட்டு மற்றும் பாதை முன்னெடுப்பின் அங்கமாக நீர் மின்னியல் திட்டங்களில் சில ஆண்டுகளாக சீனப் பொறியியலாளர்கள் பணியாற்றுகின்றமை குறிப்பிடத்தக்கது.

பிரேஸில்

# ஜனாதிபதிக்கு அவசர சத்திர சிகிச்சை?



பிரேஸில் ஜனாதிபதி ஜைர் பொல்ஸ்னரோ, சா போலோவிலுள்ள வைத்தியசாலை ஒன்றுக்கு, தடைப்பட்ட குடல் ஒன்றுக்கான பரிசோதனைகளுக்காக நேற்று முன்தினம் (14) மாற்றப்பட்டுள்ளார்.

இந்நிலையில், 2018ஆம் ஆண்டு நிகழ்ந்த கத்திக் குத்தையடுத்து, இந்தச் சுகாதாரச் சிக்கலுக்காக அவசர சத்திர சிகிச்சையை ஜனாதிபதி பொல்ஸ்னரோ எதிர் கொள்ளலாம் என அவரின் அலுவலகம் தெரிவித்துள்ளது.

இச்சந்தர்ப்பத்தில், ஜனாதிபதி பொல்ஸ்னரோ தீவிர சிகிச்சைப் பிரிவுக்கு மாற்றப்பட்டதாக அவரது மகன் பிளாவியோ கூறியுள்ளார்.

பெல்ஜியம்

லிபிய முகாம்களில்

# தண்ணீருக்காக உடலுறவுக்கு தள்ளப்படும் அகதிகள்

லிபிய தடுப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அகதிகள், காவலர்களிடமிருந்து பாலியல் வன்முறைகளை எதிர் கொள்வதாக சர்வதேச மன்னிப்புச் சபை நேற்று (15) தெரிவித்துள்ளது.

இதில், சுத்தமான நீர், உணவு, சுகாதாரப் பொருள்களுக்காக உடலுறவுக்கு வலிந்து தள்ளப்படுதலும் உள்ளடங்குகின்றது.




மத்திய தரைக் கடலில் இடைமறிக்கப்பட்டு கடந்தாண்டும், இவ்வாண்டும் லிபியாவில் தரையிறக்கப்பட்டவர்கள் தொடர்பான அறிக்கையிலேயே குறித்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

14 தொடக்கம் 50 வயதான நைஜீரியா, சோமாலியா, சிரியாவைச் சேர்ந்த 53 அகதிகளிடமிருந்தான நேர்காணல்களிலேயே குறித்த விடயம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இவர்களில் பெரும்பாலோனோர் முகாம்களிலிருந்து வெளியேறி இன்னும் லிபியாவில் உள்ளவர்கள் ஆவர்.

மெக்ஸிக்கோ



# ஹொண்டூரஸுக்கு திரும்பும் தனித்த குழந்தை

ஐக்கிய அமெரிக்காவுக்கான பயணத்தின்போது தந்தையிடமிருந்து பிரிந்த பின்னர், தென் மெக்ஸிக்கோவில் தனித்துக் காணப்பட்ட ஹொண்டூரஸ் குழந்தை ஒன்று, நேற்று (15) ஹொண்டூரஸுக்கு அனுப்பப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், ஹொண்டூரஸில் தனது தாயாருடன் குறித்த குழந்தை சேரவுள்ளதாக இது தொடர்பாக அறிந்த, தன்னை வெளிக்காட்டாத தகவல் மூலம் தெரிவித்துள்ளது. இந்நிலையில், குழந்தையின் தந்தையுடன் அலைபேசியில் கதைத்ததாக தாய் தெரிவிக்கின்ற போதும் அவர் எங்கிருக்கிறார் என்பது இன்னும் தெரியாமலுள்ளது.

நான்காவது இருபதுக்கு 20 சர்வதேசப் போட்டியில்

# மேற்கிந்திய தீவுகளை வென்ற அவுஸ்திரேலியா

மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான நான்காவது இருபதுக்கு - 20 சர்வதேசப் போட்டியில் அவுஸ்திரேலியா வென்றது.

ஐந்து போட்டிகள் கொண்ட இத்தொடரில், சென். லூசியாவில் நேற்றுக் காலை நடைபெற்ற குறித்த போட்டியில் நான்கு ஓட்டங்களால் அவுஸ்திரேலியா வென்றிருந்தது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: அவுஸ்திரேலியா

அவுஸ்திரேலியா: 189/6 (20 ஓவர்) (துடுப்பாட்டம்: மிற்செல் மார்ஷ் 75 (44), ஆரோன் பின்ஞ் 53 (37), டான் கிறிஸ்டியன் ஆ.இ 22 (14), மிற்செல் ஸ்டார்க் 8 (7) ஓட்டங்கள். பந்துவீச்சு: ஹெய்டன் வோல்ஷ் ஜூனியர் 3/27 [4], பேபியன் அலென் 1/31 [4], அன்ட்ரே ரஸல் 1/25 [3])

மேற்கிந்தியத் தீவுகள்: 185/6 (20 ஓவர்) (துடுப்பாட்டம்: லென்டில் சிமொன்ஸ் 72 (48), எவின் லூயிஸ் 31 (14), பேபியன் அலென் 29 (14), அன்ட்ரே ரஸல் ஆ.இ 24 (13) ஓட்டங்கள். பந்துவீச்சு: மிற்செல் மார்ஷ் 3/24 [4], அடம் ஸாம்பா 2/20 [4])

போட்டியின் நாயகன்: மிற்செல் மார்ஷ்

இரண்டு அணிகளுக்கும் இடையிலான ஐந்தாவது போட்டியானது நாளை காலை ஐந்து மணிக்கு சென். லூசியாவில் நடைபெறவுள்ளது.



பந்துவீச்சாளர்களின் தரவரிசையில்

# முன்னேறினார் அலென்

சர்வதேச கிரிக்கெட் சபையின் இருபதுக்கு - 20 சர்வதேசப் போட்டிகளுக்கான பந்துவீச்சாளர்களின் தரவரிசையில் பத்தாமிடத்துக்கு மேற்கிந்தியத் தீவுகளின் சகலதுறை வீரர் பேபியன் அலென் முன்னேறியுள்ளார்.

26ஆம் இடத்தில் காணப்பட்ட அலென், அவுஸ்திரேலியாவுக்கு எதிரான முதல் மூன்று இருபதுக்கு - 20 சர்வதேசப் போட்டிகளில் மூன்று விக்கெட்டுகளைக் கைப்பற்றியதையடுத்தே 16ஆம் இடங்கள் முன்னேறி 10ஆம் இடத்தை அடைந்துள்ளார்.

முதல் 10 பந்துவீச்சாளர்களின் தரவரிசை பின்வருமாறு,



தப்ரையாஸ் ஷம்சி, 2. ரஷீட் கான், 3. அடில் ரஷீட், 4. வனிடு ஹஸரங்க, 5. முஜீப் உர் ரஹ்மான், 6. அஸ்தன் அகர், 7. டிம் செளதி, 8. அடம் ஸாம்பா, 9. இஷ் சோதி, 10. பேபியன் அலென்.

முதல் 10 துடுப்பாட்டவீரர்களின் தரவரிசை பின்வருமாறு,

டேவிட் மலன், 2. பாபர் அஸாம், 3. ஆரோன் பின்ஞ், 4. டெவோன் கொன்வே, 5. விராட் கோலி, 6.லோகேஷ் ராகுல், 7. றஸி வான் டர் டுஸன், 8. மார்டின் கப்தில், 9. கிளென் மக்ஸ்வெல், 10. எவின் லூயிஸ்.

முதல் ஐந்து சகலதுறைவீரர்களின் தரவரிசை பின்வருமாறு,

மொஹமட் நபி, 2. ஷகிப் அல் ஹஸன், 3. கிளென் மக்ஸ்வெல், 4. றிச்சர்ட் பெரிங்டன், 5. கரெத் டெலனி.

# பண்டுக்கு கொரோனா




இங்கிலாந்துக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இந்தியக் குழாமில் இடம்பெற்றுள்ள விக்கெட் காப்பாளர் றிஷப் பண்டுக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளது.

கடந்த எட்டு நாள்களாக பண்ட் தனிமைப்படுத்தலில் உள்ளதாக இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் தகவல் மூலம் ஒன்று தெரிவித்துள்ளது.

இந்நிலையில் வேறுவரும் பாதிக்கப்படவில்லை என கட்டுப்பாட்டுச் சபையின் உப தலைவர் ராஜிவ் சுக்லா தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இரண்டு வீரர்கள் தொற்றுக்குள்ளானதாகவும், ஒருவருக்கு பின்னர் தொற்று இல்லை எனக் கண்டுபிடிக்கப்பட்டதாகவும், ஒருவரது தனிமைப்படுத்தல் ஞாயிற்றுக்கிழமை முடிவடைவதாக ஏ.என்.ஐ செய்தி முகவரகம் செய்தி வெளியிட்டுள்ளது.



# ‘தெளிவு வேண்டும்’

தேசிய அணியில் தனது எதிர்காலம் தொடர்பான தெளிவை, இலங்கை கிரிக்கெட் சபையிடமும், அதன் தொழில்நுட்ப செயற்குழுவிடமும், இலங்கையணியின் முன்னாள் தலைவரான தினேஷ் சந்திமால் கோரியுள்ளார்.

தொழில்நுட்பக் குழுவின் தலைவரான முன்னாள் அணித்தலைவர் அரவிந்த டீ சில்வாவுக்கு வரையப்பட்டுள்ள கடிதத்தில், அவரையும், செயற்குழுக்களையும் சந்திப்பதற்கான வாய்ப்பொன்றை 32 வயதான சந்திமால் கோரியுள்ளார்.

செயற்குழுவானது முன்னாள் அணித்தலைவர்கள் குமார் சங்கக்கார, றொஷான் மஹாநாம, முன்னாள் வீரர் முத்தையா முரளிதரனையும் உள்ளடக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

குறித்த கடிதத்தில் சிறந்த முன்னாள் வீரர்களின் 30 வயதுக்கு முந்தைய தரவுகளுடன் தனது தரவுகளை சந்திமால் ஒப்பிட்டுக் காட்டியுள்ளார்.

# ஜெர்மைனில் இணைந்தார் டொன்னருமா

பிரெஞ்சு லீக் 1 கழகமான பரிஸ் ஸா ஜெர்மைனில் ஜல்லூயிஜி டொன்னருமா இணைந்துள்ளார்.

22 வயதான டொன்னருமா, பரிஸ் ஸா ஜெர்மைனுடன் ஐந்தாண்டு ஒப்பந்தம் ஒன்றைக் கைச்சாத்திட்டுள்ளார்.

இத்தாலிய சீரி ஏ கழகமான ஏ.சி மிலனின் முன்னாள் கோல் காப்பாளரான டொன்னருமா, 16 வயதில் அறிமுகத்தை மேற்கொண்டதுடன் அக்கழகத்துக்காக 251 போட்டிகளில் விளையாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது.



விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வெள்ளிக்கிழமை, 16 ஜூலை 2021, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு 02 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.